உ

# அருத்தமிழ் ஞானம்

அறம் 3௩ உண்மையே கடவுள் சிந்தனை 1௧

சாதி, சமய, இன வேற்றுமையற்ற

ஆத்ம சிந்தனைச் சஞ்சிகை.

தை — மாசி — பங்குனி — 1994

திருவனரின் சிந்தனைத் தொகுப்புக்களும்

பிற ஆக்கங்களும்.

விநாயகர் தருமநிதிய இலவச வெளியீடு.

★ உடலுழைப்பு — சிக்கனம் — சமத்துவம் ★

பிரதிகள்: 1393 பக்கங்கள்: 40 முடிவுவிலை: 9/70

உ

நிறுவனரின் சிறிய தாயார்

# திருமதி இரத்தினம் சதாசிவம்

அவர்களின் ஞாபகார்த்த மலர்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1913 | 04-02-1994 |

இதழின் உள்ளே......


* எண்ணங்கள்
* விண்வெளியில் பிறந்த ஆற்றல் மிகு குழந்தை
* வால் நட்சத்திரம் 'ஷூமேக்கர் லெவி' வியாழன் கிரகத்துடன் மோதும் ஆபத்து
* ஓர் இளம் எழுத்தாளனின் நாட்குறிப்பிலிருந்து...
* 'இயற்கை நேசன்' பட்டம் பெற்ற திரு. மா. கனகராசா அவர்களின் சிறப்புச் செவ்வி
* அன்பும் – கடமையும்
* சமகால புகலிட வாழ்வில் ஊசலாடும் தமிழ்க் கலாசாரம்
* சிந்தனைக்குச் சில துளிகள்
* ஏன் சிறுநீரகம் கெடுகிறது
* உங்கள் உடல்நலம் உங்கள் கரங்களில்
* யோகாசனம் பழகுவதால்...
* தகவற் துளிகள்
* அமரர் உயர்திரு. க. சி. குலரத்தினம்
* தமிழனைத் தேடுகிறேன்
* எங்கே தமிழ்? எதிலே தமிழ்?
* வாழிய அறத்தமிழ் ஞானம் – கவிதை.



மேற்பார்வை – ஆலோசனை நெறிப்படுத்தல்

நிறுவனர் - வி. த. நிதியம்

ஆசிரியர்கள்:

வ. ச. செல்வராசா

க. தங்கராசா

அச்சமைப்பு:

விநாயகர் தரும நிதிய அச்சகம்

கடிதத் தொடர்பு:

நிறுவனர்
விநாயகர் தரும நிதியம்
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.


---

வாசக நெஞ்சங்களே!

உங்களது கருத்துக்களையும் ஆக்கங்களையும் அன்போடு எதிர்பார்க்கின்றோம்.

---

உ

சிவமயம்

## சமர்ப்பணம்



இம் மாநிலம் உருவாகி அதில் உயிரினங்கள் உருவாக தங்கள் சக்தியை எந்நேரமும் உதவிக் கொண்டிருக்கும் ஐந்து பூதங்களான காற்று, தீ, நீர், நிலம், ஆகாயம் இவற்றிற்கும் எம்மை உருவாக்கிய தந்தை, தாய், குரு முதலானோருக்கும் நாம் வாழ உணவு அளித்துக் கொண்டிருக்கும் தாவர வர்க்கம் முதல் மனிதகுலம் வரையான சகல சீவராசிகட்கும் எமது வணக்கத்தைச் செலுத்துகிறோம். எமது சிறு வயது முதல், தமது பிள்ளை போன்று எம்மை நேசித்து உணவளித்து ஆளாக்கியும், தற்போது எமது விநாயகர் தரும நிதிய அரிசி ஆலையாக இயங்கும் கட்டிடம் 1980–ல் நிறுவப்பெற்ற போது எமக்குப் பேருதவியாக இருந்து கட்டிடத் தொழிலாளர்களுக்கு உரிய உணவைத் தயாரித்து தந்து ஆலையின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் பாடுபட்ட எமது சிறிய தாயார் திருமதி சதாசிவம் இரத்தினம் அவர்கள் 04–02–1994 ல் இறைபதம் அடைந்தார். அன்னாருக்கு எமது வணக்கத்தைச் செலுத்தி அவர்கள் பாதார கமலங்கட்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்வதில் பூரண ஆத்ம திருப்தி அடைகின்றோம்.

விநாயகர் தரும நிதியம்
18-03-94.

— நிறுவனர்.

௳

# எண்ணங்கள்

## '௳'' பிள்ளையார் சுழி போடுவதன் காரணங்களும் தத்துவ விளக்கங்களும்

எமது பிரபஞ்ச தத்துவ விளக்கத்தில் எண்கள் தோன்றிய முறைகளை விளக்கமாகக் குறிப்பிட்டிருந்தோம். தமிழில் சிலர் இவ் வணக்கத்தை 2 எண் குறிப்பிடும் உ வடிவமாகவும், சிலர் 3 எண் குறிப்பிடும்'௳'வடிவமாகவும் எழுதி வருகிறார்கள். இதைப்பற்றிய விளக்கத்தை தருமாறு அநேகர் தபால்மூலம் எம்மிடம் வேண்டியிருந்தனர். இவற்றுக்கு ஏராளமான விளக்கத்தை எம்மால் தரமுடியும். இருந்தும் இவற்றுக்கான விளக்கத்தைக் கூடியவரை சுருக்கித் தர முற்படுகின்றோம்.

எண்ணில் ''ஒன்று'' (1) கூட்டுச்சேராத தனி எண்ணாகும். இவ் வெண்ணை சிவபெருமான் என்றும் - சூரியன் என்றும், உண்மைப் பொருளென்றும், தீப்பூதமென்றும் பலவாறாக அழைக்கின்றோம். எண்ணில் இரண்டு என குறிப்பிடும் 2 எண்ணை உமாதேவி என்றும் சந்திரன் என்றும், சக்திப்பொருள் என்றும், நீர்ப்பூதம் என்றும் பலவாறாக அழைக்கின்றோம். இவைகள் வேறு எண்கள் கூட்டுச் சேராத தனி எண்களாகும். இவ்வெண் இரண்டும் சேர்ந்ததும், மூன்று எண் உருவாகின்றது. இம்மூன்று எண்ணை விநாயகன் என்றும், வியாழன் (குரு) என்றும், அறிவுப் பொருள் என்றும், காற்றுப் பூதம் என்றும் பலவாறாக அழைக்கின்றோம். எமது சைவசமய வரலாற்றில் சிவனுக்கும் உமாதேவிக்கும் பிறந்த நான்கு புத்திரர்களில் இவ்விநாயகனை மட்டுமே இருவரும் சேர்ந்து உருவாக்கியதாக கூறியிருக்கிறார்கள். மற்றைய பிள்ளைகளை சிவபெருமானின் நெற்றிக்கண் அக்கினியிலும், உடல் அக்கினியிலும் தோன்றியதாக கூறியிருக்கிறார்கள்.

எமது சமய வணக்கங்களில் முதற்பொருளான சிவபெருமானிலும் பார்க்க மூன்று எண் குறிப்பிடும் விநாயகனை மட்டுமே முதல் வணக்கம் செலுத்தும்படி அறிவுறுத்தி உள்ளார்கள். இதற்கான தகுந்த காரணம் இருக்கவேண்டும் என்பதைச் சிந்திப்பதில் தவறு இருக்க முடியாது. தாயும், தந்தையும் இல்லாது பிறந்த சிவபெருமானிலும் பார்க்க தாய் தந்தைக்குப் பிறந்த விநாயகனுக்கு முதன்மை கொடுத்தது ஏதோ பிரதானமான காரணம் இருக்கவே செய்யும். தமிழ் மொழியில் முதல் உயிர் எழுத்தான ''அ'' வை முதலும் முடிவும் இல்லாத 3 வட்டங்களாக உருவாக்கியுள்ளார்கள். இவ் எழுத்தை தமிழ் எண்ணான ஒன்று எண் குறிப்பிடும் எழுத்தாகவும் அமைத்துள்ளார்கள். எமது தமிழ் மொழியிலும் சகல சமய வைபவங்களிலும் இலக்கிய வைபவங்களிலும் மூன்று எண்ணை நினைவு கூரும்படி அமைத்துள்ளார்கள்.

தமிழ் மொழியில் எழுத்துக்களை உயிர் எழுத்து - மெய் எழுத்து – உயிர்மெய் எழுத்து என மூன்று வகையாகவும். இனங்களில் வல்லினம் – இடையினம் – மெல்லினம் என மூன்று வகையாகவும், காலத்தை இறந்தகாலம் – நிகழ்காலம் – எதிர்காலம் என மூன்று வகையாகவும், இடங்களை தன்மை - முன்னிலை – படர்க்கை என மூன்று வகையாகவும்... எல்லாப் பிரிவுகளிலும் மூன்று வகையாகவே கையாண்டு உள்ளார்கள். இவைகளை விட சைவ சமய வரலாற்றிலும் வணக்க முறைகளிலெல்லாம் மூன்று எண்ணை நினைவு கூரும்படி பல அனுட்டானங்களை உருவாக்கியுள்ளார்கள். ஆலயங்களில் மூன்று விரலால் தரும் விபூதியை வாங்கி, மூன்று விரலால் நெற்றியில் மூன்று குறிகள் வரும்படியாக அணிந்தும், மூன்று முறை நெற்றியில் குட்டியும் மூன்று முறை தோப்புக்கரணம் போட்டும், மூன்று முறை விழுந்து வணங்கியும், மூன்று முறை வீதியை வலம் வந்தும் இவ்வாறாக எல்லா வைபவங்களிலும், எல்லா இடங்களிலும் திரும்பத் திரும்ப மூன்று எண்ணை நினைவுக்குக் கொண்டு வருகிறார்கள். பாடசாலைகளிலும், எல்லா வகுப்புக்களிலும், சகல வைவபங்களிலும் முதல் மூன்று பேரையே தெரிவு செய்கிறார்கள்.

தமிழ் மொழியில் இருந்து பிரிந்து எண்களை உருவாக்கியவர்களும் தமிழ் எண்களின் பிரதிபலிப்பு வடிவங்களையே எண்களுக்கு தாங்கள் அமைத்த வடிவங்களாகக் கொடுத்துள்ளார்கள். தமிழ் எண்ணில் முதலும் முடிவுமில்லாத மூன்று வட்டங்களை இட்டு முதல் எண்ணை அமைத்தது போலவே அராபிய எண்ணிலும் 'ஒன்று எண்' முதலும் முடிவும் இல்லாது உருவாக்கப் பெற்றுள்ளது. அவர்கள் உருவாக்கிய எண்ணிற்கு மேலே எவ்வளவு தூரம் சென்றாலும், கீழே எவ்வளவு தூரம் சென்றாலும் முடிவைக் காணமுடியாது அமைத்துள்ளார்கள். தமிழ்மொழியில் இரண்டு எண்ணை உருவாக்கியது போலவே அராபிய எண்ணிலும் உருவாக்கி உள்ளார்கள். இதே வகையாய் மூன்று எண்ணை சிறு வேற்றுமையுடன் அராபிய இலக்கத்திலும் உருவாக்கி உள்ளார்கள்.

எமது அறநெறிக் குறள்களிலே ''எழுத்தறிவித்தவன் இறைவனாவான்'' என்றும் ''நன்றி மறவேல்'' என்றும் ''மாதா பிதா குரு தெய்வம்'' என்றும் சொல்லியிருக்கிறார்கள். பகுத்தறிவுள்ள மனிதராய்ப் பிறந்த நாம் எண்ணிலடங்கா கடன் சுமைக்கு ஆளாகியிருக்கிறோம் என்பதை நன்கு உணரமுடிகிறது. எமது தாலதேகம் இவ்வாறு உருவானதிற்கு மற்றைய உயிரினங்களான மரம் முதல் கொண்டு ஆறறி

வுள்ள சகல சீவராசிகளும் உதவி செய்துள்ளதை பகுத்தறிவுள்ள நாம் நன்கு உணரமுடிகின்றது. பகுத்தறிவற்ற மற்றைய சீவராசிகள் இவற்றை உணரமுடியாது. நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களுக்குரிய வினைப்பயன்களும் எமது சூக்கும தேகத்திலே அவற்றுக்குரிய அணுக்கூறுகளாய்ப் பதிவாகின்றன.

அவ்வாறு பதிவான 5 பூத அணுத்தொகைக்கு ஏற்பவே எமது வினைப்பயன்களும், மறுபிறப்புகளும் ஒரு அணு வித்தியாசமின்றி அமைகின்றன. இவற்றின் பதிவுகளை வேறு எவ்விதமாயும் மாறுபடுத்த முடியாது என்பதை நன்கு உணர வேண்டும்.

எமது சமய வரலாற்றிலே கூறியுள்ள பிரகாரம் மூன்று எண் குறிப்பிடும் எழுத்தையே குரு வணக்கமாக நினைத்துப் பிள்ளையார் சுழி எனப் பெயர் சூட்டி எழுதப் பழக்கியிருந்தார்கள். காலம் செல்லச்செல்ல பகுத்தறிவுள்ள மக்கள் இவ்வணக்கம் போடுவதை ஓர் நன்றி உணர்வாகக் கருதாமல் செய்து வந்த காரணத்தினால் எழுத்தைச் சுருக்கி ''உ'' என்னும் வடிவமாக இடப் பழகிக் கொண்டார்கள். ''உ'' என்ற 2 எண் நீராணுவான ஆசையைக் கூட்டும் தன்மையுள்ளது. இவற்றை எல்லாம் உணர்ந்த முற்கால ஞானிகள் தமிழ் எண்ணில் மூன்று எண்ணை நினைவுகூருமுகமாக '3' எண் குறிப்பிடும் வடிவத்தை குரு வணக்கமாகப் போட வேண்டும் என அறிவுறுத்தி வந்துள்ளனர். அதையே நாமும் இவ்வளவு காலமும் பின்பற்றி வந்தோம். இன்று அதற்கான ஆழமான தத்துவங்களை ஆராயும் போது (3 எண்ணின் மகத்துவம்) காற்றணுவின் இயக்கம் இவைகளை நன்கு சிந்திக்கும் போது எமக்கு இம்மொழி எழுத்துக்களை எழுதப் பழக்கிய குருவானவருக்கு நன்றி செலுத்தும் முகமாக இக்குரு வணக்கத்தை இவ்வாறு இட்டு வருகின்றோம். மேலதிக விளக்கம் தேவைப்படின் நேர்முகமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

குரு செய்த நன்றியை நினைவு கூரும்போது – இதை எழுதுவதால் எமது சூக்கும தேகத்தில் உள்ள ஆன்ம அலையிலே ஒளியணுக்கள் பதிவாகின்றன. இவற்றை குரு வணக்கமாக நினைந்து எழுதினால் தான் எமது சூக்கும தேகத்தில் ஒளியணுக்களாய்ப் பதிவாக முடியும். நாம் பட்ட கடன்பழுவைக் குறைக்க வேண்டுமானால் அவற்றை எமக்குத் தந்தருளிய ஆன்மாக்களை நினைவுகூர வேண்டியது எமது முழுமுதல் கடமை என்பதை உணர்ந்து பகுத்தறிவுள்ள மனிதராகிய நாம் எல்லோரும் இவற்றைக் கருத்தில் கொண்டு நன்றியை மறக்காத பழக்கத்தை மேற்கொள்வதற்காக மூன்று எண் குறிப்பிடும் – இவ்வடையாளத்தை சதாநேரமும் பிரயோசனப்படுத்தி சிந்தையில் பதிவு செய்து கொள்வது பிறப்பு மேல் நிலையடையும் வழிகளாகும்.

தொடர்ச்சி 38–ம் பக்கம்...



## விண்வெளியில் பிறந்த

# ஆற்றல் மிகு குழந்தை!

— நீல் ஜெரோம் —

இன்றைய விஞ்ஞான உலகில் தாவரங்களைப் போன்று பதிய முறையிலும் சிசு பதியங்கள் உருவாக்கும் முயற்சி வெற்றி அளித்து வருகின்றது. அவ்வாறே விண்வெளியில் பிறக்கும் குழந்தைகளும் அபாரசக்தி மிகு குழந்தைகளாக விளங்குகின்றன.

அண்மையில் விண்வெளியில் பிறந்த குழந்தையொன்று வியக்கத்தகு சாதனை படைத்து வருகின்றது. ''நாஸா'' விஞ்ஞானிகளின் பரிசோதனையான இந்த விண்வெளிக் குழந்தை பேறுமிக இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டது. குழந்தையும் தாயும் நலமே பூமிக்குத் திரும்பி பாதுகாப்புப் படையினரின் கடுங்காவலில் இருந்து வருகின்றனர். வைத்தியர்கள் இக்குழந்தையின் வளர்ச்சியும், ஆரோக்கியமான துரித நடவடிக்கைகளும் குறித்து வியப்படைந்துள்ளனர். இந்த இரகசியம் இரண்டு வருடங்களின் பின்னர் அம்பலமாகியுள்ளது.

சாதாரண குழந்தையைப் போன்று காட்சியளிக்கும் இக்குழந்தை வளர்ச்சியடைந்த மனிதனின் சக்திக்கு இணையாகச் செயற்படுகின்றது. ஹாவிலோவி என அழைக்கப்படும் இக்குழந்தைக்கு நன்றாக நடக்கவும், எழுத, வாசிக்க, கதைக்கவும் முடியும். உடற்பயிற்சி வீரனைப் போன்று செயலாற்றவும் முடியும். இரண்டு வயதுக் குழந்தையான 'ஹாவி'க்கு 250 இறாத்தல் எடையை கைகளினால் தூக்கி தலைக்கு மேலே உயர்த்த முடியும். 100 யார் இடைத்தூரத்தை 10 செக்கனிலும், ஒரு மைல் தூரத்தை 3 நிமிடம் 50 செக்கனிலும் ஓடிக் கடக்க முடியும் பெரிய வாகனங்களைத் தாண்டிப் பாய முடியும். பேஸ் பந்தை 8 அடி தூரத்திற்கு அதிகமாக வீசி எறியவும் முடியும். இக்குழந்தை பிறந்தது முதல் ஆதியிலிருந்து விஞ்ஞான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டது வரையில் டாக்டர் ஜோர்ஜ் கீல் மிக அவதானமாக ஆராய்ந்து வருகின்றார்.

1990–ம் ஆண்டு 'நாஸா' நிறுவனம் மிகவும் இரகசியமாக ஒரு கர்ப்பிணிப் பெண்ணை விண்வெளிக்கு அனுப்பி வைத்தது. 1991–ம் ஆண்டு, விசேட மருத்துவ அறையில் வாழ்ந்த இப்பெண் இருண்ட விண்வெளிப் பகுதியில் மகன் ஒருவனைப் பெற்றெடுத்தாள். பூமிக்குத் திரும்பிய தாயும் சேயும், வைத்தியம் பார்த்த டாக்டரும் ஒரு மாதம் வரையும் நடக்க முடியாது படுக்கையில் இருந்தனர். காற்று கன

அடர்த்தி குறைவான பகுதியில் குழந்தை பிறந்தபடியால் ஆரோக்கிய மாக வளருமா? என அஞ்சிய விஞ்ஞானிகளுக்கு குழந்தையின் துரித வளர்ச்சி வியப்பில் ஆழ்த்தி வருகின்றது.

எதிர்காலத்தில் பாரிய கட்டிடங்களைப் பெயர்த்து விடவும், துப்பாக்கிக் குண்டுகளின் வேகத்தைவிட விரைவாக ஓட்டம் எடுக்கும் சக்தியையும் கொண்டு விளங்குவான் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்குழந்தை பிறந்த சூழலைப் போன்று பூமியிலும் ஒரு சூழலை விஞ்ஞானிகள் உருவாக்கி, புதியதொரு முயற்சியிலும் ஈடு பட்டு வருகின்றனர்.

நன்றி: வீரகேசரி — 09-01-1994

## வால் நட்சத்திரம் 'ஷூமேக்கர் - லெவி'
## வியாழன் கிரகத்துடன் மோதும் ஆபத்து

சூரியமண்டலத்தில் உள்ள மிகப்பெரிய கிரகம் வியாழன். பூமியிலும் பார்க்க பதினொரு மடங்கு பெரிதாக வியாழன் உள்ளது. அதன் தரைத்தோற்றம் பூமியைப் போன்றதாக இல்லை. வைதரசன் மேகக் கூட்டங்களால் அது சூழப்பெற்றுள்ளது. அது தன்னைத்தானே ஒரு தடவை சுற்றிக் கொள்ள 9 மணித்தியாலம் 50 நிமிடங்கள் எடுக்கின்றன.

வியாழன் கிரகத்துக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. வானசாஸ்திர விஞ்ஞானிகள் இதுபற்றிய எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்கள். அந்த ஆபத்து வால் நட்சத்திர உருவில் வந்துள்ளது. 'ஷூமேக்கர் – லெவி 9' என்று பெயரிடப்பட்ட அவ்வால் நட்சத்திரம் இப்போது வியாழனைச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது.

அந்த வால் நட்சத்திரம் ஒரு முத்துமாலை போன்று தோற்றமளிக்கின்றது. 21 துண்டுகளாக, ஒரு மைல் முதல் 3 மைல்கள் வரை இடைவெளி வித்தியாசத்தில் பல துண்டுகளைக் கொண்ட அந்த நட்சத்திரம் காணப்படுகிறது.

ஓராண்டுக்கு முன்னர்,

முன்னர் ஒரு தடவை ஒரு வருடத்திற்கு முன் வால் நட்சத்திரம் ஒன்று வியாழன் கிரகத்தை நெருங்கி வந்தது. ஆனால் மோதவில்லை. எனினும் வியாழனின் பிரமாண்டமான புவிஈர்ப்புச் சக்தி அதனை பல துண்டுகளாகப் பிய்த்தெறிந்து விட்டது.



துண்டுகளான அவ்வால் நட்சத்திரத்தை கடந்த மாசச் மாதம் தான் ஷூமேக்கர் மற்றும் லெவி ஆகிய விஞ்ஞானிகள் முதலில் கண்டு பிடித்தனர். அவ்விஞ்ஞானிகளின் பெயர்களினால் அவ்வால் நட்சத்திரம் பின்னர் அழைக்கப்படலாயிற்று. 'ஷூமேக்கர் – லெவி 9' வால் நட்சத்திரத்தின் துண்டுகள் விண்வெளியில் ஒரு லட்சம் மைல்கள் வரையில் சிதறிக் காணப்பட்டன. சூரியஒளியில் அவை மின்னிக் கொண்டிருந்தன. விஞ்ஞானிகளுக்கு அவை முத்துமாலை ஒன்று விண்வெளியில் மிதந்து கொண்டிருப்பதை நினைவுபடுத்தின.

### படம் எடுத்த ஹபிள் தொலைநோக்கி:

'ஷூமேக்கர் – லெவி 9' வால் நட்சத்திரத்தை விண்ணில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் ஹபிள் விண்கலத்தில் உள்ள தொலைநோக்கி இக்கோடை காலத்தில் படம் எடுத்தது. அப்படங்கள் கடந்த வாரம் வெளியிடப்பட்டன. அவ்வால் நட்சத்திரம் 21 துண்டுகளாகச் சிதறியுள்ளதை அப்படங்கள் மூலம் விஞ்ஞானிகள் அடையாளம் கண்டனர். ஒவ்வொரு துண்டின் மையப்பகுதியும் மூன்று மைல் அகலமானதாக இருக்கிறது.

### வியாழன் எதிர்நோக்கும் ஆபத்து:

இவ்வால் நட்சத்திரத்தின் துண்டுகளின் போக்கு மற்றும் அது செல்லும் பாதை பற்றி அரிசோனா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த டாக்டர் ஜேம்ஸ், ஸ்கொட்டி ஆகிய விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர். இவ்வால் நட்சத்திரத்தின் துண்டுகள் அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக – ஆறு நாட்கள் கால இடைவெளியில் – வியாழன் கிரகத்தை அடையும் என்று அவர்கள் கூறியுள்ளனர்.

இந்த ஆறுநாட் காலம் அடுத்த ஆண்டு யூலை 18ம் திகதி ஆரம்பமாகிறது. இக்காலம் யூலை 23ம் திகதி முடிவடைகிறது. பெரும்பாலும் யூலை 21ம் திகதி இவ்வால் நட்சத்திரத் துண்டுகள் வியாழன் கிரகத்துடன் மோதும் என்று அவர்களின் ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டது.

### மோதல் பயணம்:

வியாழன் கிரகத்துடன் நேரடியாக மோதும் பயணத்தை இவ்வால் நட்சத்திரம் தற்போது மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. பூமியிலிருந்து நோக்கும் போது சூரியனுக்கு மறு புறத்தில் பயணம் செய்யும் இவ்வால் நட்சத்திரம் கண்களுக்குத் தெரியாமல்

இருப்பினும், விஞ்ஞானிகளின் கவனம் முழுவதும் அது வியாழனுடன் மோதுவதால் ஏற்படும் விளைவுகளைப் பதிவு செய்வதில் உள்ளது.

பூமியிலும், விண்வெளியிலும் வரிசையாக தொலைநோக்கிகளை விஞ்ஞானிகள் தயாராக வைத்துள்ளனர். மோதல் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படும் வேளையில் – வியாழனில் இருந்து 15 கோடி மைல் தொலைவில் – கலிலியோ விண்கலமும் 'வொயேஜர் – 2' விண்கலமும் இருக்கும் என்றும் –

அப்போது அவை இம்மோதலை நேரடியாகத் தெளிவாகப் பதிவு செய்யும் என்றும் விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

## அணு ஆயுதங்களை விட 10 ஆயிரம் மடங்கு அழிவுசக்தி

இவ்வால் நட்சத்திரம் வியாழனுடன் மோதும்போது ஏற்படும் தாக்கத்தின் அளவு பற்றியும் விஞ்ஞானிகள் கணக்கிட்டுள்ளனர்.

வல்லரசுகளுக்கு இடையேயான கெடுபிடி, யுத்தம், உச்சக்கட்டத்தில் இருந்த போது உலகில் இருந்த அணு ஆயுதங்களின் அழிவுச் சக்தியிலும் பார்க்க 10 ஆயிரம் மடங்கு அதிகமான தாக்கத்தை வியாழனுடனான மோதல் உருவாக்கும் என்று விஞ்ஞானிகள் மதிப்பிட்டுள்ளார்கள்.

வியாழனின் பல நிறமுகில்கள் ஊடாக வால் நட்சத்திரத் துண்டுகள் வினாடிக்கு 40 மைல் வேகத்தில் செல்லும்போது அவை பிரகாசமான நெருப்புக் குண்டுகள் போல் காட்சி அளிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூமி சந்தித்த பேரழிவு:

ஆறுகோடி 50 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் பூமியுடன் வால் நட்சத்திரம் ஒன்று மோதி பெரிய அழிவை ஏற்படுத்தியது. அப்போது உலகில் இருந்த டினோசர் உட்பட பல அரிய உயிரினங்கள் அழிந்து போயின என்று கூறப்பட்டது.

அப்படியான ஒரு பேரழிவுடன் ஒப்பிடக் கூடிய ஒரு நிகழ்வாக வியாழனுடன் வால் நட்சத்திரம் மோதுவது அமையலாம் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பு. அப்படியான ஒரு பேரழிவு பற்றி காண – ஆராய – ஆறு கோடி ஆண்டுகளுக்குப் பின்னர் உலக விஞ்ஞானிகளுக்குக் கிடைத்த முதல் வாய்ப்பாகக் இது கருதப்படுகிறது.

வியாழனின் வளிமண்டலத்தைத் துளைத்துக் கொண்டு வால் நட்சத்திரத்தின் துண்டுகள் செல்வதால் என்ன நடக்கும் என்பதை விஞ்ஞானிகளினால் உறுதியாகக் கூறமுடியவில்லை.

இப்படி ஒரு அசாதாரண அற்புத நிகழ்வை ஆய்வு செய்யும் வாய்ப்பு முன்னர் எப்போதும் கிடையாதபடியால் இம்மோதலின் போது எதனை எதிர்பார்க்கலாம் என்பது பற்றி நிச்சயமாகக் கூறமுடியாது என விஞ்ஞானிகள் ஒப்புக் கொள்கின்றனர். □



சென்ற இதழ் தொடர்ச்சி...

# ஓர் இளம் எழுத்தாளனின் நாட்குறிப்பிலிருந்து

— சுபா —

( கரவை கலை இலக்கிய வட்டம் )

என்னைப் பற்றிய அறிமுகத்துடன் உரையாடலை ஆரம்பித்தேன். மனதில் நிறுவனரைப் பற்றிக் கொண்டிருந்த எண்ணங்கள் பதிந்தபடி இருந்ததினால் அவதானமாகவே கேள்விகளை எழுப்பினேன்.

நாம் பிள்ளையார் சுழி என எண்ணும் ''ஃ'' இதனை அவர் குருவிற்குரிய வணக்கமாகக் கருதி எந்த ஒரு கடிதத்திலும் தாம் இடுவதாகக் கூறினார். இதனைச் சிலர் தவறாகப் புரிந்து கொண்டு தமக்குக் கடிதங்கள் எழுதும்போது மற்றவர்களும் பிள்ளையார் சுழி இடவேண்டும் எனத் தாம் விரும்புவதாவும் கருதுவதாகவும் கூறினார்.

இப்படித்தான் நிறுவனருக்கும், பொது நிறுவனங்களிற்குமிடையே பலவித சிக்கல்கள் தென்படுகின்றனவாம். உண்மைநிலை என்னவெனில் பொது நிறுவனங்கள் தமக்குத் தாமே சில கட்டுப்பாடுகளை விதித்தவண்ணம் நிறுவனரை அணுகுவதாக உணரக்கூடியதாக இருந்தது.

மேலும் நிறுவனரது கருத்துப்படி தாம் ஆங்கிலம் கலக்காத தூய தமிழை எங்கும் எதிர்பார்ப்பதாகவும், இதனால் தாம் பல உயர்கல்வி நிறுவனங்களோடு கூட மோத வேண்டி வந்ததாகவும் கூறினார்.

மதம் பற்றி நிறுவனர் பின்வருமாறு கூறினார். ''மதவெறி இருக்கக் கூடாது. அது யானைக்கு மதம் பிடிப்பது போலவே மனிதருக்கும் அது பிடித்துவிடும்.'' எது எப்படியிருப்பினும் அவர் இந்து மதம் தொடர்பாகத் தனக்கென சில கோட்பாடுகளை வரித்துக் கொண்டு செயற்படுகின்றார் என்பது அவர் பேச்சில் தொனித்தது.

தமிழைப் பொறுத்தமட்டில் ''ஆறுமுகநாவலர்'' அவர்களைப் போலவே நிறுவனரும் சைவம் வளரத் – தமிழ் வளர்ப்பதாகக் கருத இடமுண்டு.

ஊனமுற்றோர், பார்வை இழந்தோர் பராமரிப்பற்றோர் எனப் பலரும் பசியாறிச் செல்லும் தலமாகவே நிதியம் விளங்குகின்றது. இதனை அங்கே நின்றபோது, பலரும் அரிசிபெற நீண்ட வரிசையில்

திற்பதைக் கொண்டும், அவர்களிடம் பேச்சுக் கொடுத்தும் அறியக் கூடியதாக இருந்தது.

''தம்பி! நீரும் நானும் பேசிக்கொண்டிருப்பதோ ஒரு பொதுமை யான கட்டத்திலே, நானோ ஒரு பொதுமைக்கு உரியவன். எனது வாழ்வு ஒரு திறந்த புத்தகம்'' என நிறுவனர் கூறிவிட்டு, தமது சொந்த வாழ்வு எவ்வாறு பொது வாழ்வாக மாறியதெனக் கூறினார். தற்போது அவரது வலதுகை ஓய்வு கேட்டு தொழிற்படாது உள்ளது. உழைத்து உழைத்துத் தேய்ந்த கை எனப் பெருமையோடு அவர் அதனைக் காட்டியபோது ஏதோ ஒருவித உணர்வு என்னுள் இழையோடியது.

71 ஆண்டுகள் உலக உலாவை நிறைவு செய்தும், இன்னமும் இயந்திரங்களோடும், தொழிலாளிகளோடும் உலவி வருபவர். இவரைப் பாராட்ட வேண்டியது அனைத்து இளைஞர்களினதும் தார்மீகப் பொறுப்பாகும்.


தமக்கும் பின்னர் கூட ''தரும நிதியம்'' எவ்வாறு இயங்குமோ என ஆதங்கப்படும் அன்பருக்கு, எமது சமூகம் தன்னில் கொண்டுள்ள சில விஷமிகள் கிறுக்கலாகப் பல கருத்துக்களை எழுதவும் தவற வில்லையாம். இந்தச் செய்தியை எனக்குக் கூறிவிட்டு சற்று வேதனை யோடு சில மடல்களை எனக்குக் காட்டினார். இத்தகைய இடங்களில் ''மாமனிதர் சுந்தர் அவர்கள் கூறுவார், இப்படிப்பட்ட அநாமதேயக் கடிதங்கள் ஒரு பொது முயற்சிக்கு வந்தால் அதன் அர்த்தம் அது வெகு சிறப்பாக முன்னேறி நடக்கும் முயற்சியாக இருக்குமாம்.'' இந்த அனுபவ அனுராகத்தை அவரிடம் மீட்டிவிட்டு விடை பெற்றேன்.

## நிறுவனர் தந்த சில தகவல்கள்

(வெளிவந்த புத்தக விபரம்)

- ★ இதுவரையில் 25 இலட்சம் ரூபா பொது நலனிற்காகச் செலவு செய்யப்பட்டது.
- ★ காலாண்டாக 2 இலவச வெளியீடுகள்.
- ★ (தொடர்ச்சியாக) குறிப்பிட்ட காலஇடை வெளிகளில் பலவித இலவச நூல்கள்.





நீண்ட பரந்த வல்லை வெளியில் காற்றின் ஊடுருவலைத் தடுக்கவும் உவர்த்தரையிலே பசுஞ் சோலை ஒன்றை உரு வாக்கவும் மரம் நடுகைத் திட்டங்கள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. அவற் றுள் தனிமனிதர் ஒருவர் தனது சொந்த நிதியூட் டத்தில் 4 ஏக்கர் பரப்பில் ஆரம்பித்த 'சுதர்சனம்' மரம்நடுகைத் திட்டமும் ஒன்றாகும்.

அதன் உரிமையாளர் திரு. மா. கனகராசா (வயது 43) அவர்களை கரவை சுபா அவர்கள் சந்தித்தபோது........

---

**கேள்வி:** தங்களை எமது வாசகர்களிற்கு அறிமுகம் செய் யுங்களேன்.

**பதில்:** விவசாயக்குடும்பம் ஒன்றிலே பிறந்த எனது தனிப்பட்ட தொழில் வியாபாரம். ஆரம்பக்கல்வியை யா/மாணிக்க-வாசகர் வித்தியாலயத்திலும், பின்னர் பத்தாம் வகுப்புவரை கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலும் பயின்றேன்.

**கேள்வி:** இந்த 'சுதர்ஸனம்' மரம் நடுகைத்திட்டம் ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏன் தங்களிற்கு ஏற் பட்டது?

**பதில்:** சிறுவயதில் அதாவது இளைஞராக இருந்த போதே திரு. கனகராசா (மில்க்வைற்) அதிபர் அவர்கள் எனது மனதினைக் கவர்ந்தார். பின்பு நான் வியாபார நோக்கமாக தென்பகுதியில் தங்கியிருந்த போது அங்கு இடம் பெறும் விழாக்களிற்கு பிரமுகர்கள் மரங்களை நட்டு ஆரம்பிப் பார்கள். அதற்குரிய காரணத்தை ஆராய்ந்தேன். இவ் வாறாக எனது சொந்த மண்ணிற்கு நான் திரும்பியது முதல் இந்தத் திட்டத்தை உருவாக்கினேன்.

கேள்வி: இத்திட்டம் பற்றிய சில விபரங்கள்.........

பதில்: இது 1-10 1998 ஆரம்பிக்கப்பட்டது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் கரவெட்டி தெற்கு-மேற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையும் போதுமான ஆதரவைத் தருகின்றன.

இங்கு வேம்பு, தேக்கு, சவுக்கு, வெள்வேல், பூவரசு, ஆல், இலுப்பை முதலான மரங்கள் நாட்டப்பட்டுள்ளன.

2 வருடங்களில் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப் படுகிறது.

கேள்வி: வர்த்தக உலகிற்கு ஏதாவது கூறவிரும்புகின்றீர்களா?

பதில்: சுபா! இதில் நாங்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். வர்த்தக உலகில் உள்ளவர்களிற்கு ஆலோசனையோ, அறிவுரையோ கூற எனக்கு அருகதை இல்லை என்றே கூறவேண்டும். தேசாபிமானி ஆ. சி முருகுப்பிள்ளை அவர்கள் போன்று, தமது வாழ்வை, பணத்தை முழுமையாக பொதுமைக்கு அர்ப்பணித்தவர்களே அதற்கு உரித்துடையவர்கள். எனவே நான் கூறக்கூடிய ஒன்று இயலுமானவரை வர்த்தக நண்பர்கள் தாம் ஈட்டும் இலாபத்தில் இந்த மண்ணிற்கு ஏதாவது செய்யவேண்டும் என்பதுதான்.

நாம் அவரிடம் விடைபெற்று வரும்போது தனது அலுவலக அறையில் தன் வியாபார நிறுவனத்தால் வெளியிடப்பட்ட நாட்காட்டியொன்றைக் காட்டினார். அதில் ஒரு புதுமை காணப்பட்டது சினிமா நட்சத்திரங்கள் அதில் கண்சிமிட்டவில்லை. மாறாக அதில்

மரந்தான்......
எல்லாம்
மரந்தான்......
மறந்தான்
மனிதன்
மறந்தான்......

என்ற வைரமுத்துவின் கவிதை வரிகளுடன் கூடிய இயற்கைக் காட்சி மனதைக் கவர்ந்தது.





# அன்பும் கடமையும்

(குறுமுடியான்)

வாழ்க்கையை நலப்படுத்தும் முக்கிய கொள்கைகள் இரண்டு. அவை அன்பும் கடமையும். வாழ்க்கை அழகும், இனிமையும் உடையதாக்குவது அன்பு. வாழ்க்கையைப் பலமும், பெருமையும் உடையதாக்குவது கடமை. அன்பு, கடமை ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதவை. இவ் இரண்டும் இசைவாகக் கலந்துள்ள வாழ்க்கையே சிறந்த நோக்கங்கொண்ட வாழ்க்கையாகும் ஒழுக்கச் சட்டத்துக்கு அமைய நமது நடத்தையை ஒழுங்குபடுத்திக் கொள்ளாமலும், கடமையைச் செய்யவேண்டுமென்று இலேசான உணர்ச்சியையும் அடக்கிக்கொள்ளத் தயாரில்லாமலும், நமது அன்புக்கு அடிமையாகும் காலமே வாழ்நாள் பலமற்றதும், தாழ்வுற்றதுமாகின்றது. நமது உணர்ச்சி நம்மைச் செலுத்தும் இடமெங்கும் நாம் செல்ல வேண்டியவர்களாகின்றோம். கடுமையும், உயரிய அறிவுமுடைய கடமைக்குப் புறம்பான வாழ்க்கை எதுவும் வாழ்க்கையாகாது. தூய அன்பு ஒழுங்குக்கும், தன்னடக்கத்துக்கும் கட்டுப்பட்டதாகவே இருக்கும். அன்பும், கடமையும் கலவாத வாழ்க்கை கடுமையும், கோரமுமானது. நல்லொழுக்கம் அன்பும் பிரியமுமான இயல்புடன் கூடிய பொழுதுதான், சாருண்யத்தன்மையுடையதாகின்றது.

சமுதாயத்தில் சில நோய்நிலைகள் உள்ளன. சமுதாயத்தைப் புதுப்பித்து அமைக்கும் ஆற்றல் பெற்ற மக்கள் தவறான கருத்துக்களை வெறுத்து ஒதுக்குவது அவசியமாகும். அவர்களின் மிருதுத் தன்மை வெளிப்படாமல் இருக்க வேண்டும். உலகம் விரும்புவது இத்தகைய குணாம்சத்தையல்ல. இக் குணம் ஒழுக்கப் பெருமைக்கு உற்றதாகாது. சிறந்த குணங்கள் தத்தமக்குரிய சிறந்த குறிகள் சமபாகமாகக் கலந்திருப்பதை அடைய ஆவல் கொள்ள வேண்டும்.

கடமையும், அன்பும் ஒன்றுக்கொன்று துணையாகின்றன, கடமை அன்பைத் திருத்துகின்றது. அன்பு கடமையை எளிதாக்குகின்றது. நன்னெறிப் பழக்கமே அன்பை அசுத்தம், லௌகீகம் இவற்றிலிருந்து சுத்தப்படுத்துகின்றது. செயற்கரிய செய்கையையும் எளிதாகவும், திருத்தமாகவும் செய்து முடிக்குந் திறன் அன்பினாலேயே அமைவது கடமையே அன்பைப் பெரிதும் தூய்மை செய்வது இது கடவுள் பக்தி பூண்ட இல்வாழ்வான் தன் குடும்ப காரியங்களில் ஈடுபட்டு இருக்கும் முறைக்கு தன் நயம் மிக்க உலக விவகாரத்திலேயே

பொழுதுபோக்கும், இல்வாழ்வான் தன் குடும்ப காரியங்களில் ஈடு
பட்டு உழைத்துவரும் முறைக்கும் உள்ள வேற்றுமையால் விளங்கிக்
கொள்ளப்படும். இவர்களில் வைதிக வாழ்க்கை உடையவன் தன்னு
டைய பேரன்புக்கு இலக்காயிருப்பவர்களைத் தன்னுடைய இன்ப
வாழ்வுக்குத் துணையானவர்களென்று கருதாது, கடவுளால் தன்னு
டைய பாதுகாப்புக்குள் வைக்கப்பட்டவர்கள் என்றே கருதுவான்.
தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பவர்களுடைய நல்வாழ்வும், இன்ப
மும் கருதி உழைத்து, அவர்களைக் கடவுளிடத்து அன்பு செலுத்து
கின்றவர்களாகவும், கடவுளுடைய ஆணைக்குக் கீழ்படிந்து நடக்கின்
றவர்களாகவும் செய்ய முயல்கிறான். இவன் தன்கையை எதிர்பார்த்
திருக்கின்றவர்களைத் தன்மனம் போனபடி நடத்த விரும்பாமல்
அவர்களுடைய கூட்டுறவால் தன்னிடம் பொருந்தியிருக்கும் அன்பை
யும், ஆனந்தத்தையும் பெருக்கிக்கொள்ள முயல்கிறான். கடவுளை
முன்னிட்டு அவர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும் தவறா
மற் செய்கின்றான். அவர்களிடம் கடவுளன்பின் ஒளி விளங்கக்
காண்கிறான். அவர்களின் வாயிலாகக் கடவுளின் இனிமையும், அழ
கும் நிறைந்த அன்பு நீர் (கருணை வெள்ளம்) தன்னுள் பாய்வதாக
உணர்கின்றான்.

அடுத்து கடவுள் நெறிபடாத மற்றவன் வாழ்கையைக் கவ
னிப்போம். இவன் தனது தொடர்புடையாரிடம் நடந்துகொள்ளும்
முறை முற்றிலும் மாறுபட்டது. இவன் தன்னைச் சார்ந்தவர்களை
நேசிக்கிறான். விளக்கமாகக் கூறின் மிகுந்த பற்றுடன் விளங்குகின்
றான். ஆனால் இவன் கொண்டுள்ள அன்பு உயரிய ஒழுக்க நோக்
கங்களை கொண்டு அமையாததால் சிறப்படையமாட்டாது. கடவு
ளின் பொருட்டு அவர்களுக்குத்தான் தொண்டுபுரிய வேண்டும் என்ற
நல்லுணர்ச்சி அவனுள்ளத்தில் உதிப்பதில்லை. தன்னை அடுத்திருப்
பவர்களுக்கு இவ்வுலக இன்பங்களை செய்து வைப்பதில் கருத்துடை
யவனே அன்றி அவர்களுடைய மறுமை நலன் கருதிக் கடவுள்
உணர்வு அவர்களுக்கு அமையக்கூடியதான துறையில் உழைப்பவன்
அல்ல. சுருங்கச் சொல்லின் இவன் அவர்களிடம் காட்டும் அன்பில்
தூய்மை மணம் பரிமளிப்பதில்லை.

கடமை அன்பை எவ்வளவு சிறப்பிக்கக் கூடியதாகின்றதோ
அவ்வளவு அன்பும் கடமையின் பாதையைத் திருத்தி மிருதுவாக்குகின்
றது. அன்பர்கள் பொருட்டு அளவிறந்த துன்பங்களை நுகர்வது
இயற்கையே. இத்தகைய துன்பங்களையும், இடையூறுகளையும் பிறர்
பொருட்டு யார்தான் பொறுத்தல் கூடும். ஆனால் தன்னால் விரும்பப்
படுபவரிடத்திலே அவை அளவுக்கதிகமாகக் காணப்பட்டாலும்,
அவற்றை அற்பமாகக் கருதி மகிழ்வுள்ளத்துடன் தாங்கிக் கொள்கின்ற
வனாகின்றான். கடமைகளை அன்புடன் செய்கின்ற பொழுது ஊக்கம்



உண்டாகின்றது. செய்யமுடியாதென கருதிவிடப்படும் செய்கைகளும்
அன்பின் ஆற்றலால் மிகவும் இலகுவாகச் செய்து முடிக்கப்படுகின்றன.
புல் தடுக்கிவிழும் தைரியமுடையவனும் அன்பின் வலிமையால் வன்
பெரும் பூதங்கள் செய்து முடிக்கும் வலிய காரியங்களையும் செய்து
முடிப்பவனாகின்றான். அன்பே பலம். அன்பால் நாம் பலமுடையவர்
களாகின்றோம். தன்னலம் பாராட்டிகளேபவினர்கள்.

நம்முடைய சாதாரண அனுபவமே அன்பின் வலிமையை அள
விட்டுரைப்பதாகும். கடவுள் விருப்பத்தை நிறைவேற்ற முற்படாமல்
நமது இச்சையைப் பூர்த்தி செய்யவே முற்படுகின்றோம். கடவுள்
விருப்பத்துக்கிசைந்து நாமும் ஒரு காரியத்தைச் செய்ய விரும்புவது
மிகவும் பிரயாசையான காரியமே. என்றாலும் கடவுள் திருவுள்ளத்
திற்கிசைந்தவற்றை நினைத்தலும் செய்தலும் அவசியம். ஆனால் சில
காரியம் நம்மால் செய்து முடிக்கக் கூடியதன்று. மக்களாகிய நாம்
கடவுள் விருப்பத்துக்கு இணங்கி நடக்கக் கடைப்பட்டிருக்கின்றோம்.
கடவுளுக்கு முற்றிலும் கீழ்ப்படிந்து ஒழுகுவதை நாம் உணர்கின்றவரை
நமக்குச் சாந்தம் உண்டாகாது. நாம் பலமற்றவர்கள். அன்பொன்று
தான் நம் பலக்குறைவை பல நிறைவாக மாற்றக் கூடியது. கடவுளை
மட்டும் நாம் நேசிக்க வேண்டிய முறையில் நேசித்து வருவோமாயின்
அளவுகடந்த, நீக்குவதற்கரியதான துன்பங்களும் எளிதில் நீங்கிவிடும்.
கடவுள் வழியில் ஒழுகுபவர்க்கு இடையில் ஏற்படக்கூடிய தடைகள்
அகன்றுவிடும். கரடுமுரடான பாதையும் மெத்தென விளங்கும் ஒரு
காரியத்தைச் செய்ய வேண்டுமென்ற விருப்பத்திற்கும், அதனைச்
செய்து முடிப்பதற்கும் இடையில் ஏற்படும் கஷ்டங்களும் கணப்பொழு
தில் ஒழிந்து போகும். நாம் தூய்மையுடனிருக்க முயல்கின்றோம்.
ஆனால் பொறிவழியுண்டாம். தவறுகள் தவறாமல் நாளும் ஏற்படு
கின்றன. ஆசையை அடக்கி அறிவொழுக்கத்தைக் கடைப்பிடித்து
மேம்பட விரும்புகின்றோம். அடிக்கடி ஆசையே நம் நல்நோக்கத்தை
மேற்கொள்ளுகின்றது. இப்படி அடிக்கடி தவறிப்போகாமல் நிலைத்த
நெறியில் நிற்கவேண்டுமானால் கடவுளை நேசிக்க வேண்டும். கடவுள்
சந்நிதானத்தில் நாம் இருக்கின்றோமென்னும் உணர்ச்சி நம்முள் தோன்
றுகிற காலத்தில்நம் ஆன்மா எவ்வளவு தெய்வமணத்தால் பரிமளிக்கின்
றது. கடவுளின் பேரொளியழகின் ஒரு சிறுதுளி நம் உள்ளத்திலுள்ள
அவநம்பிக்கையை அகற்றி உள்ளத்தைத் தூய்மை நீரால் சுத்தப்படுத்த
வல்லதாகின்றது. இங்ஙனம் மாசற்ற தூய்மையான மனம் பின் ஒரு
பொழுதும் மாசுற்று மலினமுறாது. ஆத்மீக வாழ்வின் முயற்சியும்
கவலையும் இறைவன் திருவடிப்பேற்றையடைந்து இன்புறுவதேயாம்.

☐

# சமகால புகலிட வாழ்வில் ஊசலாடும் தமிழ் கலாச்சாரம்

— *செல்வமதீந்திரன்* —

**இ**ன்று இனவாதம் அதிகம் இடம் பெறும் நாடாக கணிக்கப்பட்டுள்ளது ''பிரிட்டன்'' தான். எனினும் இதில் ஆச்சரியம் என்னவென்றால் கறுப்பின மக்களே இனவாத தாக்குதலில் கூடுதலாக ஈடுபடுகிறார்கள். ஆனால் இது ஏனைய ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் வெளிநாட்டவருக்கு எதிரான போராட்டத்தில் முற்றிலும் மாறுபட்டதாகவுள்ளது.

இதேபோல் ஜேர்மனியில் தலைவிரித்தாடும் நாஸிகள் இயக்கத்தினர் அகதிமுகாங்கள், வீடுகள் கட்டிடங்களை தீக்கிரை இடுவதும் வெளிநாட்டாரைத் தாக்குவதிலும் ஈடுபடுகின்றனர். எனினும் இந்த நாஸிகள் இயக்கத்தை ஜேர்மன் அரசாங்கம் சட்டபூர்வமாக தடைசெய்தும் அவ்வியக்கத்தின் செயற்பாடுகள் இன்றும் தொடர்த வண்ணம் இருப்பது அகதிகளுக்குத் தொல்லையாக இருக்கிறது. இதே மாதிரி பிரான்சில் 1972ல் அமைக்கப்பட்ட லுபென் தலைமையிலான தேசிய முன்னணி (*National Frout*) பிரான்ஸ் மக்களிடம் அதிக செல்வாக்குப் பெறத் தொடங்கியிருப்பதால் அகதிகளுக்கு எதிரான குரல்கள் எழுந்த வண்ணம் இருக்கின்றன. இத்தாலியிலும் பார்ட இயக்கம் முசோலினியின் தேசிய சோசலிச வாதமும், இத்தாலியின் வட பகுதியில் வாழும் வெளிநாட்டவருக்கு எதிராக இயங்குகின்றன. ஒஸ்ரியாவிஸ் ஜோர்ஜ் கெய்படர் தலைமையிலான வலதுசாரி ஒஸ்திரியன் விடுதலைக் கட்சி வெளிநாட்டவருக்கு எதிராகப் பிரசாரம் செய்கின்றனர்.

சுவிஸிலும் அகதிமுகாம் எரிப்பு, அகதிகளுக்கு எதிரான கோசம் என்பன இடம் பெறுகின்றன. பிலிக் (*Blick*) போன்ற சுவிஸின் முன்னணிப் பத்திரிகைகள் வெளிநாட்டவருக்குப் பிறக்கும் குழந்தைகள் பற்றி நகைச்சுவைத் துணுக்குக்கள் வெளியிடுவது என்ற போர்வையில் துவேஷத்தை தெரிவிக்கின்றன.

இப்படியே ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு வருகை தந்து வாழும் தமிழர்கள் தமது கலாச்சாரத்தை காப்பாற்ற வேண்டிய அவசியத்தை உணரவேண்டி வந்தது. கணவன், மனைவி, குழந்தை என்னும் ஒரு சமூகத்தின் உறுப்பினர்கள் காணப்படுவதால் கலாச்சாரத்தைக் காப்பாற்றுவதற்கான கருத்து மோதல்கள் இடம் பெறுகின்றன.



ஆரம்பத்தில் கணவன் மனைவி அதாவது குடும்பம் என்ற நிலையில் வெளிநாடுகளுக்கு வந்தர்களை விட இளைஞர்கள்தான் அதிகம் புலம் பெயர்ந்தனர். ஆனால் இப்போதுதான் திருமண நோக்கங்களுக்காக பெருமளவு பெண்கள் ஐரோப்பாவிற்கு வந்த வண்ணம் இருக்கின்றனர்.

இந்த வகையில் நோக்குகையில் ''எங்கடை பிள்ளைகளுக்கு தமிழ் பேசவராது கொஞ்சந்தான் தெரியும்'' என பெருமைப்பட்டுக் கொள்ளும் பெற்றோருர்களும் இருக்கின்றனர். எங்கள் வீட்டில் தமிழ் கதைத்தால் பிள்ளைகளுக்கு ஜேர்மனோ பிரஞ்சோ சரியாக பேசவராது என்பதினால் நாங்கள் கதைப்பதில்லை என கதைப்பவர்களையும் காணமுடிகிறது. இந்த நிலையில் எமது சமூகம் போனால் எமது எதிர்காலம் என்னவாவது என்பதை இவர்கள் உணர்வார்களா? இந்த நிலையைப் போக்க தமிழ் பத்திரிகைகள், சஞ்சிகைகள் முனைகின்றன. இந்த வகையில் பாரிசில் இருந்து வெளிவரும் ஓசை என்னும் சஞ்சிகை நகைச்சுவை துணுக்கு வெளியிட்டிருந்தது. அதாவது சரஸ்வதி படத்தைப் பார்த்துவிட்டு குழந்தை தாயிடம் கேட்கிறது... அம்மா... சலாட்டுக்கு மேல் வீணையுடன் (சாப்பாட்டுக்கு முன்னர் உண்ணும் ஒரு வகை மரக்கறிகள்) இருக்கும் இந்த அன்ரியின் பெயரென்ன? என்று இப்படியே தமிழ்க் கலாச்சாரம் போய்க் கொண்டிருந்தால் இறுதியில் தமிழ்ச் சமுதாயம் ஒன்று இருக்குமா?

இது குழந்தை சம்மந்தமான பிரச்சனையாகவே காண முடிகிறது. இனிமேல் அம்மா அப்பா என்றழைக்காமல் (மம்மி, ப்பா, டொச்சில்) என்றழைக்குமாறு பிள்ளைகளுக்குக் கூறுகிறார்கள். ஆனால் இந்தப் பெற்றோர் ஒன்றை உணர வேண்டும். அதாவது தங்கள் எதிர்காலம் என்ன என்பதை தொடர்ந்து இந்த நாடுகளிலே வாழ முடியுமா...? நாங்கள்தான் இருக்க விரும்பினாலும் ஐரோப்பியர்கள் இருக்க விடுவார்களா? இல்லவே இல்லை எங்களின் வருகையால் ஐரோப்பியர்களுக்கே வேலையில்லா பிரச்சனை போன்ற பல பிரச்சனைகள் தோன்றி விட்டன. என்பதையும் நாம் உணர வேண்டும். இதன் விளைவுகளால் நாம் என்றாவது ஒரு நாள் நாட்டுக்கு திரும்ப வேண்டி வரும் என்பதை உணர ஏன் மறுக்கிறோம். எனினும் அந்நிய நாடுகளில் வாழ்ந்து கொண்டு அந்த நாட்டின் கலாச்சாரத்துக்கு ஏற்றபடி மாறாமல் நமது கலாச்சாரப்படி வாழ்ந்தால் ஐரோப்பியர்களைப் பொறுத்தவரையில் நம்மை பைத்தியக்காரர்கள் என்ற பார்வைதான் பதிந்திருக்கும்.

ஆனால் ஒரு தமிழ்ப் பிள்ளை ஐரோப்பிய பாடசாலைக்கு செல்லும் போது அக்குழந்தை ஐரோப்பிய பழக்கவழக்கங்களையும் கலாச்சாரத்தையும் நிச்சயம் பின்பற்றித்தான் ஆகவேண்டும். இதை

தவிர்த்தால் அந்த பிள்ளையின் படிப்பு பாழாகி, எதிர்காலம் கேள்விக் குறியாகும். இந்த வகையில் பிள்ளைகளுக்காக பெற்றோரும் ஐரோப்பிய கலாச்சாரத்தை கடைப்பிடிப்பதைத் தவிர வேறு வழி என்ன? இந்த வினாவிற்கு விடை காணமுடியாத பெற்றோர்கள் தான் மேற்படி வாழ்கிறார்கள்?

ஆனால் இதற்கு அடுத்த அணியொன்று தஞ்சமடைந்த நாடுகளில் தன்மானத்துடன் வாழ நினைக்கின்றது. எமது மொழி, பண்பாடுகள், கலாச்சாரம் என்பவற்றை பாதுகாக்க வேண்டும் என கருதுகிறது. இப்படியானவர்கள் ஐரோப்பாவில் எதிர்நோக்கும் பிரச்சனைகளை பார்போமானால், பெரிய பிரச்சனையாகவுள்ளது. திருமண விழாக்களுக்கு சாறி உடுக்காமல் வந்தால், அதைப் பார்த்து கேலி செய்யும் கூட்டமும் இருக்கிறது. எனினும் ஜீன்சும் சொவற்றருமாக குளிரும் தங்களை இறுக்கி போர்த்திக்கொள்ளும் பெண்களுக்கு திருமணவிழாக்களுக்காவது சாறிகட்டாவிட்டால், ஆயிரக்கணக்கில் சம்பாதித்து வாங்கி பெட்டிக்குள்ளே வைத்திருக்கும் பட்டுப் புடவையின் நிலைதான் என்னவாவது?

தமிழ் விழாக்களுக்காவது கலாச்சாரப்படி ஆடைகளை அணிவதா? இல்லையா? என்ற வினா தோன்றுகிறது. அதேவேளை பெண்கள் தொழில் புரியும் இடங்களில் சாறிகட்டிப்போனால் கண்டிப்பாக ஐரோப்பிய சக தொழிலாளர்கள் சிரிப்பார்கள். அந்த சிரிப்பிலிருந்து தப்ப வேண்டும். அடுத்த பக்கம் குளிர சாறியை சற்று நேரத்துக்குள் துளைத்து உடலுல் ஊசி குத்துவது போல் குத்தும் இவற்றின் பிரதிபலிப்புக்களாலும், பெண்கள் சாறி கட்ட முடியாமல் போகிறது.

நாட்டின் எதிர்காலத்தையே தீர்மானிக்க வேண்டிய தமிழ் இளைஞர்கள் ஐரோப்பாவில் திறந்த செக்ஸ் கொள்கைகளால் கவரப்படுகிறார்கள். அதனால் அவர்கள் திசை திருப்பப்படுகிறார்கள். காபரே, மாதுக்கள் என மனம் அலைகிறது. இத்தோடு கஸினோ போன்ற சூதாட்ட நிலையங்களில் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை ஊதாரியாக செலவு செய்து வரும் பொறுப்பற்ற சமூக, அமைப்பொன்றும் உருவாகி வரும் அபாயம் தெரிகிறது. எனினும் எவ்வளவு தூரம் முன்னேறிய நாட்டில் வாழ்ந்து கொண்டு கத்திக்குத்து கலாச்சாரமும், சாதிச்சண்டையும் வழக்கமாகி வரும் வரப்பிரசாதமற்ற நிலைமை காணமுடிகிறது.

## மாளிகை விமானம்

உலகில் மிகமிக நவீனமானதும், விலை கூடியதுமான விமானத்தை அமெரிக்க ஜனாதிபதி பயன்படுத்துகிறார். இரு மெத்தை கொண்ட படுக்கை அறை, குளியல் அறை, மருத்துவமனை, நான்கு உயர்சக்தி வாய்ந்த கம்பியூட்டர்கள், 85 தொலைபேசிகள், அலங்கரிக்கப்பெற்ற ஆலோசனை அறை, பாதுகாப்பு ஏற்பாடுகள் இத்தனையும் கொண்டிருக்கிறதாம் அந்த விமானம். — அறிவுக்களஞ்சியம்.



# சிந்தனைக்கு சில துளிகள் .........

*— தொகுப்பு: செல்வா —*

மனிதனுக்கு இருக்க வேண்டிய உயர்ந்த பண்பாடு நன்றிதான். ஏ மனிதனே மண்ணும், நிலமும், நீரும், காற்றும், வானமும் ஆகிய பஞ்சபூதங்களும் இந்த உலகத்திலே உன்னைப் படைத்து காத்து வருகின்றன. உன்னைப் பெற்றெடுத்து, காத்து, வளர்த்து வருகின்ற இந்தச் சமுதாயத்துக்கும், இந்த உலகத்துக்கும் நன்றி உள்ளவனாக கடமைகளை ஆற்ற வேண்டும் என்று சொல்வதற்காகத்தான், பெரிய பெரிய மேதைகள் எல்லாம் நமக்கு அரிய பெரிய விடயங்களை ஆழமாக எம் நெஞ்சங்களில் பதியவைப்பதற்காகத்தான் காவியங்களைப் படைத்தார்கள்– இலக்கியங்களை சமைத்தார்கள். இந்த காவியங்களையும் இலக்கியங்களையும் பல பெயர் சொல்லி அழைக்கின்றோம், இவைகளில் இருந்து எத்தனையான பெரிய விடயங்களை அறிந்து– தெரிந்து அதனைப்பின்பற்றி வாழ முனைகின்றோம் முற்படுகின்றோம். அவற்றின் அடிப்படை நோக்க மெல்லாம் ஏ மனிதனே நீ சும்மா சோம்பேறியாக வாழ்ந்து விட்டுப் போகக் கூடாது உன்னால் முடிந்ததை இந்தச் சமுதாயத்திற்கும் – நாட்டிற்கும் செய்ய நாளை என்று சாட்டுச் சொல்லாது இன்றே செய் என்பதுதான்.

இந்த மண்ணுக்கும் சமுதாயத்திற்கும் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வேண்டும் நன்றியுள்ளவனாய் இருக்க வேண்டும். நாடு எமக்கு என்ன செய்தது என்ற எண்ணத்தை விரட்டி நாட்டுக்கு நாம் என்ன செய்தோம் – செய்கிறோம் என்ற சிந்தனையை வளர்க்க முயலவேண்டும் – முற்படவேண்டும். ஏன் என்றால் நாடும் இந்தச் சமுதாயமும் இந்த மக்கள் கூட்டமும் தான் நம்மை வளர்க்கின்றன– வாழவைக்கின்றன.

இதைத்தான் வள்ளுவரும் ஔவையாரும் மற்றைய பெரிய ஞானிகளும் எமக்காக பெரிய அறிவுப் பொக்கிசங்களை வரைந்து வைத்துள்ளார்கள். அதனால் தான் மனிதன் நன்றியுள்ளவனாயும் விசுவாசம் உள்ளவனாயும் இருக்க வேண்டும். என பலகருத்துகள் நிலவுகின்றன– எம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

எம்மிடம் இராமாயணம் இருக்கின்றது, திருக்குறள் இருக்கின்றது' பாரதம் இருக்கின்றது, பெரியபுராணம் இருக்கின்றது, திருவாசகம், சிலப்பதிகாரம் என்ற பல பெரிய அறிவுக் களஞ்சியங்கள் இருக்கின்றன என்பதை மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் போதுமா? இராமலிங்க சுவாமிகள் ஆறாயிரம் பாடல்களை எதற்காகப் பாடினார். திருவள்ளுவர் எதற்கு ஆயிரத்து முன்நூற்றி முப்பது குறள்களைப்

படைத்தார். பிறருக்கு உதவவேண்டும். ஏன் உதவவேண்டும் அது தான் மனிதத்தன்மை- மனிதப்பண்பாடு- மனிதநாகரீகம் இதைத்தான் இவர்கள் இவ்வளவு பாடல்கள் மூலம் எமக்குப் போதித்துள்ளார்கள்- அவர்கள் போதனையை நாம் பின்பற்றுகிறோமா பின்பற்றி அடுத் தவருக்கு உதவ முற்படுகின்றோமா என்பதை எமது மனச்சாட்சியைத் தான் கேட்டுப் பார்க்க வேண்டும்.

மனிதனாகப் பிறந்தவர்கள் எல்லோரும் மனிதத் தன்மையோடு வாழ வேண்டும்- உதவும் எண்ணத்தை எம் உள்ளத்தில் வளர்க்க வேண்டும். என்பதைத் தான் இரண்டாயிரம் மூவாயிரம் வருடங் களாக இந்தச் சிந்தனையாளர்கள் நமக்குச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் கதை சொல்வதற்காக இதை இவர்கள் வரையவில்லை தமது சிந்தனைக்கு உயிர் கொடுத்து மனித சமுதாயம் நாணயத்தோடும் நாகரீகத்தோடும் வாழ வேண்டும் வளரவேண்டும் என்ற உயர்ந்த உள்நோக்கத்தோடு தான் வரைந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஏன் அவர்கள் அறிவுக்கருத்துக்களை- அறநெறிக் கருத்துக்களை- மனிதவாழ்விற்குத் தேவையான உயர்ந்த கருத்துக் களை அமைத்திருக்க வேண்டும். இவைகளை நம்மில் எத்தனை பேர் எண்ணுகின்றோம் இவைகளைப் பின்பற்றுகின்றோம். நாம் மனிதர் கள் என்று பெருமைப் படுகின்றோம் ஆனால் பறவைகளிடையே உள்ள ஒற்றுமை நம்மிடையே இல்லை என்று வேதனைப் படுகின்றோம்.

பின்னர் எதற்காக இந்த அறிஞர்களும் ஞானிகளும் தோன்றி னார்கள். நமக்குத் தெரியாத எதையாவது சொல்லத்தானே இவர்கள் தோன்ற வேண்டும். நாம் தானே நமக்குத் தான் எல்லாம் தெரியும் என்ற போக்கில் செய்து கொண்டிருக்கின்றோமே ... பின்னர் ... இவர்கள் எதற்காகத் தோன்றினார்கள்... மனிதன் என்ற போர் வையில் நாமும் மனிதர்கள் என்று வாழும் எம்போன்றவர்க்கு மனிதனாக வாழ்வது எப்படி என்பதை கற்றுத்தருவதற் காகத்தான் அவ்வப்போது மகான்கள் தோன்றினர்.

உ

## என்னாலும் பேச முடியும்

— கோப்பாய் சிவம் —

சின்னஞ் சிறுவர்களுக்கான மேடைப் பேச்சுக்கள் – கட்டுரைகள் வரைதல் போன்றவைகளை உள்ளடக்கியதாக இந்நூல் அமைக்கப் பெற்றுள்ளது. இன்றைய இளம் சிறார்களின் ஆளுமையை மேம்படுத்த இவ்வகையான நூல்கள் பெரிதும் உதவுமென நம்புகின்றோம்.

— நிறுவனர்.



உ

# ஏன் சிறுநீரகம் கெடுகிறது?

இறைவன் படைத்த எத்தனையோ விந்தைகளில் மனித உட லும் ஒன்று. அதில் ஒரு சின்னப் பாகம் கெட்டுப் போனால்கூட நம் மால் மாற்றுப்பாகம் பொருத்த முடியுமா? சிலவற்றிற்கு முடியும் என விஞ்ஞானம் நிரூபித்தாலும் அதற்கு இலட்சக் கணக்கில் செலவாகி றது. சிறுநீரகப்பகுதி நம் உடலில் உள்ள முக்கியமான பகுதிகளில் ஒன்று. இப்பாகம் சம்மந்தப்பட்ட மருத்துவத்துறையை ''நெப்ராலஜி" என்கிறார்கள். தமிழ்நாடு கொஸ்பிற்றலின் நெப்ராலஜி துறையின் தலைவர் டாக்டர் ஜார்ஜி ஏப்பிரகாம் சிறுநீரகங்களின் வேலை களைப்பற்றிச் சொன்னபோது மிக வியப்பாக இருந்தது. சிறுநீரகத்தில் நெப்ரோன் எனும் மெல்லிய குழாய்கள் 8 லட்சம் முதல் 17 லட்சம் வரை இருக்குமாம். இங்குதான் இரத்தத்திலிருந்து உப்பு போன்ற அழுக்குக்கள் நீக்கப்பட்டு அவை சிறுநீர்க்குழாய் வழியாக வெளி யேற்றப்படுகிறது. அதேபோல இரத்தத்தில் சிவப்பணுக்கள் உருவா கத் தேவையான ''எரித்ரோ போயட்டின்" எனும் பொருள் இங்கு தான் உருவாக்கப்படுகிறதாம்.

சிறுநீரகம் கெடும் போது உடம்பின் அத்தியாவசியமான இவ் விரண்டு வேலைகளும் நடைபெறுவதில்லை. உடம்பில் உப்பு நீக்கப் படாமல் அதிகமானால் மரணம் நிகழும். அதேபோல சிவப்பணுக்கள் ஆரோக்கியமாக இல்லையெனில் இரத்த சோகை எனும் பலவீனம் ஏற்படுகிறது. இதற்காகத்தான் ''டயாலிஸிஸ்" செய்யப்படுகிறது. அல்லது மாற்றுச் சிறுநீரக அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது.

சர்க்கரை வியாதி, உயர் இரத்த அழுத்த நோய், இன்பெக் ஷன்ஸ், சிறுநீரகத்தில் கற்கள், பிறப்பிலேயே சிறுநீரகக் கோளாறு போன்றவை இருக்கும் போது சிறுநீரகம் தன் வேலை செய்யும் சக் தியை இழக்கிறது. ஆனால் சிறுநீரகம் கெட ஆரம்பிக்கிறது என்பது அது 80% கெட்ட பிறகுதான் வெளிப்படையாகத் தெரியுமாம். வாந்தி அதிகமான சோர்வு, சிறுநீரில் இரத்தம் வருதல் போன்றவை அறிகுறி களாகும். சிறுநீரும் அதிகமாக வெளியேறுவதில்லை. அதற்குப் பிறகே சிறுநீரகம் கெட்டுப் போயிருக்கிறது என்று தெரிந்து கொள்ள முடிகிறது.

இதனால் உடலில் இரத்திலிருந்து உப்பு பிரிக்கப்படாமல் அதிகம் சேர வாய்ப்பிருக்கிறது. உடனடியாக இதற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படுகிறது.

## என்ன சிகிச்சை?

''டயாலிஸிஸ்'' என்ற வார்த்தையை நாம் நிறைய கேள்விப்படுகிறோம். உடலினுள் சிறுநீரகம் செய்யும் வேலையை வெளியே உள்ள கருவி ஒன்று செய்கிறது. உடலிலிருந்து இரத்தம் அந்தக் குழாய்க்குச் செலுத்தப்பட்டு, அது மீண்டும் உடலுக்குள் செலுத்தப்படுகிறது. இது வாரத்திற்கொருமுறை அல்லது நோயாளியின் நோயின் தன்மைக்கேற்ப செய்யப்படுகிறது. இதற்கு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற ஆகும் பொருள் செலவு ஏராளம். மீண்டும் டயாலிஸிஸ் வரை உடம்பில் அதிகம் கழிவு சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதற்குத்தான் சமீப காலத்தில் நாங்கள் புதிய டயாலிஸிஸ் ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறோம் என்கிறார் டாக்டர் ஜார்ஜி.

இதை ''பெரிடோனியல் டயாலிஸிஸ்'' என்கிறார்கள். கல்சியம், சோல்ற், குளுக்கோஸ், மக்னீசியம் போன்ற தாதுப்பொருட்கள் கலந்த திரவம் அடங்கிய பை உள்ளது. இதனை பெரிடோனியம் எனும் வயிற்றின் மேற்பரப்புத் தசைகளுடன் பொருத்தி விடுகிறார்கள். இது சிறுநீரகம் செய்யும் வேலையைச் செய்கிறது. ஆஸ்பத்திரியில் தங்கி டயாலிஸிஸ் செய்து கொள்ளும் நிர்ப்பந்தத்தினால் தொழில், வியாபாரம் போன்றவைகளைக் கவனிக்க முடியாமல் அவதிப்படுபவர்களுக்கு இது பெரும் வரப்பிரசாதம். நாமே இதனை வயிற்றோடு பொருத்திக் கொள்ளலாம். இத்திரவம் சிங்கப்பூரிலிருந்து இறக்குமதியாகின்றது. அநேகமாக தமிழ்நாடு மருத்துவமனையில் மட்டும்தான் இப்படிப்பட்ட டயாலிஸுக்கான கருவியைப் பொருத்துகிறார்கள் என்று கூறப்படுகிறது.

## மாற்றுச் சிறுநீரக அறுவைச் சிகிச்சை

இது போல டயாலிஸிஸை அடிக்கடி செய்து கொண்டே இருக்க முடியாது என்பதால் பொருத்தமான மற்றொரு சிறுநீரகத்தைப் பாதிக்கப்பட்ட நபருக்குப் பொருத்துகிறார்கள். அதென்ன பொருத்தமா? ஒவ்வொரு மனிதனுக்கும் இரண்டு சிறுநீரகங்கள் உள்ளன. சதாரணமாக ஒன்று இருந்தாலே போதும். ஆரோக்கியமான இரண்டு சிறுநீரகங்களில் ஒன்றைத் தானமாகக் கொடுக்கலாம். கொடுப்பவருக்கும், கொடுக்கப்படுபவருக்கும் ஒரே குரூப் இரத்தம் இருக்கவேண்டும். அது தவிரவும் பிரசவ காலத்தில் பார்ப்பது போன்ற $RH+RH$—டெஸ்டும் செய்யப்படுகிறது. அதிலும் இருவருக்கும் பொருந்தும் போதுதான் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.



ஏனெனில் பொதுவாக எந்த வெளிப்பொருளும் உடலுக்குள் போகும் போது அல்லது தோன்றும் போது அதை வெளியே தள்ளவே அனைத்து செல்களும் முயற்சிக்கும். அதனால் வேறொரு சிறுநீரகத்தை பொருத்தினால் ''அண்டிபாடீஸ்'' உருவாகி அதைத் தோற்கடிக்க முயலுமாம். எனவே அப்படியும் தோன்றாத வகையில் இரத்த அணுக்கள் இருவருக்கும் ஒன்றாக இருக்கிறதா எனப் பார்த்துக் கொள்கிறார்கள். அப்படியும் சில சமயம் பதினைந்து நாட்கள் கழித்துக்கூட ''ரிஜெக்ட்'' செய்துவிடுமாம். அதற்காகவே வெளியே இருந்து வைக்கப்பட்ட சிறுநீரகத்தை ஊக்குவிக்க மருந்துகள் கொடுக்கப்படுகின்றன.

இதனால்தான் கான்சர், இருதயநோய் உள்ளவர்களுக்கு இத்தச் சிகிச்சை செய்வதில்லை. ஏனெனில் மாற்றுச் சிறுநீரக வேலையை ஊக்குவிக்கக் கொடுக்கப்படும் மருந்து ஏற்கனவே இருக்கின்ற கான்சர், இருதயநோயையும் வளர்க்க ஆரம்பித்துவிடுமாம். நெப்ராலஜியில் புகழ்பெற்ற டாக்டர் ஜார்ஜி ஆபிரகாம் மிக உற்சாகத்துடன் ஒவ்வொன்றையும் சிறு குழந்தைக்குப் புரிய வைப்பது போல எளிமையாகச் சொன்னார். கடைசியாக அவர் விடுத்த வேண்டுகோள்தான் மனத்தை நெகிழ வைத்தது. சிறுநீரகம் செயலிழக்கிறது என்பது மட்டுமல்லாமல் உடலின் பல்வேறு உறுப்புக்களும் நலம் குன்றலாம். அந்தப் பாதிக்கப்பட்ட நபர் உயிருக்குப் போராடும் போது அவருடைய நெருங்கிய உறவினர்கள் எத்தனை துடிப்பார்கள்? நலிவடைந்த அந்தப் பாகத்துக்கு மாற்றுக் கிடைத்து அவர் உயிர் பிழைத்தால் அவரின் மனைவியோ / கணவனோ / குழந்தைகளோ எவ்வளவு சந்தோசப்படுவார்கள்.

வெளிநாடுகளில் பலரும் இதற்காகவே ஒரு கார்டை எப்போதும் பைக்கற்றில் வைத்திருப்பார்கள். அவர்கள் விபத்தில் (அ) திடீரென்று மரணமடையும் பட்சத்தில் அவர்கள் உடலிலிருந்து தேவையான உறுப்புகளை எடுத்துப் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குப் பொருத்தலாம் என்பதற்கான சம்மதம் தரும் கார்டே அது.

சிறுநீரகத்தை 60 மணி நேரமும், இருதயம், லிவர் போன்றவற்றை 4 மணி நேரமும் பாதுகாக்க முடியுமாம். அதேபோல கடாவரி மாற்று என்ற ஒன்றும் உண்டாம். மூளை மட்டும் இறந்து போய், உடல் உறுப்புகள் மட்டும் செயல்படுவது உண்டு. இது ''கோமா'' போன்ற நிலைமை. இந்தச்சந்தர்ப்பத்திலும் உறவினர்கள் சம்மதிக்கும் பட்சத்தில் ஆரோக்கியமான உடல் உறுப்புகளைத் தானமாக அளிக்கமுடியும்.

நம்முடைய நாட்டில் இதுபோல ஒரு நிலைமை வருமானால் எவ்வளவோ நன்றாக இருக்கும். நாளும் நூற்றுக்கணக்கான விபத்

நுக்கள் நடந்து மனிதர்கள் இறக்கிறார்கள். அவர்களுடனேயே அவர்களுடைய ஆரோக்கியமான உடல் உறுப்புகளும் இறந்துவிடுகின்றன. கணவனை இழந்துகொண்டு இருக்கும் ஒரு மனைவிக்கோ, குழந்தைக்காகப் போராடும் தாய்க்கோ உறுப்பைத் தானம் செய்வது எத்தனை மகிழ்வைத்தரும்?

நாம் அனைவருமே இறந்தபிறகு நம்உடல் உறுப்புக்களைத் தானம் செய்ய முன்வரவேண்டும். உடலைச் சிதைக்காமல் அழகாக உறுப்புகளை எடுத்து நோயாளிகளுக்கு உபயோகிக்கலாம் இந்த விளிப்புணர்வு இந்த மாபெரும் சமூக உணர்வு அனைவர்க்கும் ஏற்பட இதை ஒரு இயக்கமாகவே ஏற்படுத்த வேண்டும்.

நம்முடனே நம் உறுப்புக்கள் மண்ணோடு மக்கிப் போகாமல் யாரோ ஒருவருக்கு வலியை, கண்ணீரைத் துடைக்குமானால் அது எவ்வளவு மகத்தான விஷயம்?

ஆதாரம்: ''மங்கையர் மலர்''
நன்றி: மில்க்வைற்அனுபந்தம்.

மெழுகுவர்த்தி

பண்டைக் காலம் முதல் ஒளிதரும் விளக்காக மக்கள் மெழுகுவர்த்தியைப் பயன்படுத்தி வருகின்றனர். முதன் முதலில் ஆடு, மாடு என்பவற்றின் கொழுப்பில் இருந்து மெழுகுவர்த்தி செய்யப்பட்டது. பின்னர் தேன்மெழுகு (Beeswax) பாரபின் திமிங்கிலக் கொழுப்பு, எண்ணெய் என்பவற்றிலிருந்து மெழுகுவர்த்தி செய்து வருகின்றனர். கிறிஸ்தவக் கோயில்களில் பெரிய மெழுகுவர்த்தி விளக்குகளைக் காணலாம். கிறிஸ்மஸ் பண்டிகையின் போது கிறிஸ்தவர்கள் தமது வீடுகளை மெழுகுவர்த்தி விளக்குகளால் அலங்கரிப்பார்கள். பிறந்தநாள் கேக்குகளில் வயதைக் குறிக்கும் எண்ணிக்கையில் மெழுகுவர்த்திகள் பயன்படுத்தப்படுகின்றன.

நன்றி: அறிவுக் களஞ்சியம்



## உங்கள் உடல்நலம் உங்கள் கரங்களில்

## அரிசிச்சோறும் சர்க்கரை நோயும்

''எவ்வளவுக்கு எவ்வளவு உங்கள் உணவு வெள்ளையாக இருக்கின்றதோ! அவ்வளவிற்கு விரைந்து நீங்கள் சாவை நோக்கிப் போய்விட்டீர்கள்''

என்கிறது ஒரு இயற்கை வாழ்வியல் மொழி. நெல் அரிசிச்சோறு பற்றி நமது பழைய இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. ஆனால் கோதுமை, பார்லி, ஓட்சு போன்ற மற்ற தானியக்குறிப்பு அதில் இல்லை. இந்த அரிசி உணவு நல்லவிதமாக கைகளினால் உமிநீக்கப்பெற்று பழையகாலத்தில் உண்ணப்பெற்றது. ஆகையினால் அரிசியின் உள்பகுதியை மூடியிருக்கும் சிவப்பு ஒருவித பழுப்பு நிறத்தாலாகிய உறை அகற்றப்படுவதில்லை. ஆதலின் அவர்கள் வெறும் கார்போகைதறேட் மட்டும் இல்லாது விற்றமின் ''பி'' உயிர்ப்பொருளையும் சேர்த்துப் பெற்று வந்தனர். கிட்டப்பார்வை, தோல் நோய்கள், பசியின்மை, அசிரணம் போன்ற நோய்களால் அலக்கழியாமலும் இருந்து வந்தனர்: இப்போது நவீன அரிசி அரைவை எந்திரங்கள் வந்துவிட்டன. பாடுபட்டு பணத்தை ஒன்றுக்குப் பத்தாய் அள்ளி இறைத்து பசுமைப்புரட்சி என்ற பெயரால் உண்டாக்கப்பட்ட அரிசி அதன் முழுநலத்தோடு மக்களின் வயிற்றைச் சென்றடையவில்லை. அதன் உயிரான பகுதிகள் சீவித்தள்ளப்படுகின்றன. மக்கள் மலச்சிக்கலால் பாதிக்கப்படுவதற்கு இந்த உமி நீக்கிய அரிசியே காரணம். மக்கள் கூட்டம் கண்ணாடி அணிந்து கிழடு தட்டிக் காணப்படுவதற்கும் இந்த வெள்ளை அரிசியே காரணம். வசீகரமின்றி பொலிவிழந்து கூனிக் குறுகி மக்கள் நலிந்து விட்டதற்கும் இந்த வெள்ளை அரிசியே காரணம். எவ்வளவு சாப்பிட்டாலும் சாப்பிட்டது போல இல்லையே என்று மக்கள் சக்தி பெறுவதற்காக தெம்பு மாத்திரைகளை கண்டவாகில வாங்கி விழுங்கத் தலைப்பட்டு விட்டனர். ஒருபுறம் விற்றமின் ''பி'' உயிர்ச்சத்து லட்சக்கணக்கில் சேதமாகிறது. மறுபுறம் ''பி'' கொம்பிளக்ஸ் குடுவை மாத்திரைகள் லட்சக் கணக்கில் விற்பனை. இது நாட்டுமக்களுக்கு எவ்வளவு பெரிய செலவு? இழப்பு? இந்த வெள்ளைச்சோற்றை தின்று தின்று உள்ளே உள்ள உறுப்புக்கள் அதனைச் சீரணித்துக் கெட்டுப்போய் குடற்புண் சர்க்கரை நோய் போன்ற சொல்லொணா நோய்கள். அரிசிச் சோறு உண்ணும் தமிழர்கள் தான் ஹெக்ஸ்ட் கம்பனி தயார் செய்யும் டயனில் இராஸ்டினான் போன்ற சர்க்கரைக்கட்டுப்பாட்டு மாத்திரைகளை மிக அதிகமாக வழங்குகின்

றனர். கைக்குத்தரிசி தயாரித்து உண்ணப் பழகுவோம். வேலை சற்று மிகுதி எனினும் உடலுக்கு ஆரோக்கியம், நோய்கள் அண்டாது, செலவு பாதியாய்க் குறையும் நாம் ஒவ்வொருவரும் குறைவாக உண்ணப் பழகப்பழக உரம் போட்டுப் பெருவாரியாய் ''அதிக மகசூல்'' மாய்மாலங்கள் குறையும். இயற்கையாம் பூமி உரம் என்ற நஞ்சைக் குறைவாய்ப் பெறுவள். சிந்திப்போம்.

''கைக்குத்தரிசி கவின்மிகு உடலுக்கு''

தொகுப்பு; க. கனகராசா
ஆக்கம்: '' கிராமராஜ்யம் ''

## பற்களில் வரும் நோய்

நாகரிக மக்களிடம் தோன்றும் முக்கியமான பல் நோய்கள் இரண்டு. ஒன்று பற்சொத்தை - மற்றையது பற்சீழ். பற்சொத்தை என்பது, பல்லின் எனாமல் கெடுவதால் வருவது. நோயுற்ற பல் அரிக்கப்பட்டிருக்கும், கறுத்திருக்கும். நோய் கண்டவுடன் சிகிச்சை செய்யாவிடில் நோய் முற்றிப் பல் விழுந்துவிடும். இனிப்புப் பொருட்கள் கூடுதலாக உண்பதாலும் அவை பற்களில் தங்கி விடுவதாலும் பற்சொத்தை அதிகம் ஏற்படுகின்றது. குடிக்கும் நீரில் புளோறின் என்னும் பொருள் 10 இலட்சம் துளியாக இருக்கவில்லையெனில் பற்கள் சொத்தையாகும். பற்சீழ் என்பது ஈறுகளில் அழற்சி உண்டாகிச் சீழ் வருவதாகும். இவ்விரு நோய்களும் தகுந்த பல் வைத்தியரிடம் காட்டிச் சிகிச்சை பெற வேண்டும். யாழ் மாணவர்களில் 70 வீதமானவருக்கு பற்களில் பழுதுண்டு என்பது கவலைதரும் செய்தியாகும்.

நன்றி: அறிவுக் களஞ்சியம்.



தினமும் ஏதாவது ஒருவகைக் கீரை சாப்பிடுவது நல்லது. முருங்கைக் கீரையை பருப்புப் போட்டு கூட்டுச் செய்யலாம். பருப்புடன் மசியல் செய்யலாம். வெண்காயம் உப்புப் போட்டு இலேசாக வதக்கியும் சாப்பிடலாம். பருப்பும் தேங்காயும் கூடச் சேர்த்தால் ருசி அள்ளிக்கொண்டு போகும்.

இன்சுலினும், ஊசியும், மருந்தும், மாத்திரையும் சோம்பியிருக்கும் பான்கிரியஸ்சை ''நீ சோம்பியே இரு, நாங்கள் கவனித்துக்கொள்கிறோம்'' என்கின்றன. சமயத்தில் காலை வாரிவிட்டாலும் விட்டுவிடும். யோகாசனமோ சோம்பியுள்ள பான்கிரியாசைத் தூண்டிவிட்டு உற்சாகப்படுத்தி வேலைவாங்குகின்றது. எது நல்லது? நீங்களே தீர்மானிக்கலாமே.

## யோகாசனங்கள் பழகுவதால்

1. உயிர்க் கருவிகளான இருதயம், சுவாசப்பைகளை நேராகத் தாக்கி வீரிய நிலையில் வைக்கிறது,
2. இரத்தோட்டத்தைச் சுறுசுறுப்பாக்கி அசுத்த இரத்தத்தை முற்றிலும் போக்குகின்றது.
3. குழலற்ற சதைக்கோள ரசங்களை ஒழுங்கான முறையில் சுக்கச் செய்கிறது. இரத்தத்தில் கலக்கச் செய்கிறது.
4. நோய்க் கிருமிகளைக் கொன்று ஜீவஅணுக்களை உயிர்ப்பிக்கும் சக்தியை எண்ணற்ற மடங்கு அதிகரிக்கச் செய்கிறது.
5. வளர்ச்சி, ஆண்மை, பெண்மை உன்னதம் பெற உதவுகிறது.
6. உடலை வனப்புறச் செய்கிறது.
7. ஊளைச்சதை பற்றாது தடுக்கிறது.
8. ஆயுளை அதிகரிக்கச் செய்கிறது.
9. மூளையை அபிவிருத்தி செய்கிறது.
10. நரம்புகள், நரம்பு வலைகள், நரம்புச் சக்கரங்களை விழிப்பித்து வீரியப்படுத்தி நன்கு வேலை செய்யத் தூண்டுகிறது.
11. காம, குரோத, லோப, மோக, மத மாச்சரியங்களை பரிசுத்தம் செய்து ஆட்சி புரிகிறது.
12. மனத்திற்கு சாந்தி அளிக்கிறது.
13. பிராணவாயுவை உடலில் சமாதானமாக இயற்கைக்கு உகந்தவாறு பரவி நிலைத்து வேலை செய்யத் தூண்டுகிறது.
14. சளைக்காது அதிகவேலை, அதிகபடிப்பு, அதிகசிந்தனை செய்ய உதவுகிறது.
15. ஒவ்வொருவரையும் அவரவர் தொழிலில், வாழ்வில் வெற்றி பெறப் புத்திசாதுரியத்தை அளிக்கிறது.

ஆக்கம்: சர்வோதயம் தொகுப்பு: க. கனகராசா

# தகவற் துளிகள்...

★ உலகிலேயே அதிக மக்கள் பேசும்மொழி என்னவென தெரியுமா? உங்களில் அநேகர் ஆங்கிலம் என நினைக்கக்கூடும். அதுதான் இல்லை. சீனமொழியே உலகில் அதிக மக்கள் பேசும் மொழியாகும். 70 கோடி மக்கள் சீனமொழியை பேசுகிறார்கள். ஆங்கிலமொழி பேசுவோர் 37.5 கோடியாவர் ஆங்கிலம் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது.

★ மனித உடலில் தொழில் அற்றுப்போன 90 உறுப்புக்கள் காணப் படுகின்றன. குடல்வளரி, வாற்பகுதி முதுகென்புகள், வேட்டைப் பற்கள். மயிர்கள் ஆண்களின் முலைச்சுரப்பிகள் போன்ற தொழிற் பாடற்ற இவ்வுறுப்புகள் பதாங்க அமைப்புகள் எனப்படும்.

★ ஹொங்கொங் (HONGKONG) இல் 45 வகையான பாம்புகள் காணப்படுகின்றன. இவற்றுள் 14 இனங்கள் நஞ்சுத்தன்மை வாய்ந் தவையாகும். ஹொங்கொங் அநேக ஆண்டுகளாக பாம்பு இறைச்சி ஏற்றுமதியில் ஈடுபட்டு வருகின்றது.

★ பூச்சிகளினால் மகரந்த சேர்க்கையடையும் தாவரங்களைப்பற்றி அறிந்திருப்பீர்கள். மலேயாக் காடுகளில் யானையினால் மகரந்த சேர்க்கையடையும் தாவரங்கள் காணப்படுகின்றன. றவ்லேசியா (Rafflesia) எனப்படும் இத்தாவரமே உலகில் மிகப்பெரிய பூக் களை உருவாக்குகின்றன. தரையின் கீழ் வேறு தாவரங்களின் வேரில் முழு ஒட்டுண்ணியாக காணப்படும். இத்தாவரம் நிலத் திற்கு மேலாக பூக்களை உருவாக்குகின்றன. இப் பூக்களின் உள்ளே தேங்கும் மழைநீரை யானைகள் பருகவரும் போது மகரந்த சேர்க்கையை ஏற்படுத்துகின்றன.

★ பென்சில்களில் H, B எனக்குறிப்பிடப்பட்டு வருகின்றது. H என்பது கடினத்தையும் (HARD) B என்பது கருமையையும் (BLACK) குறிக்கின்றது.

★ ஒலிச்செறிவினை அளக்கப்பயன்படுத்தும் ஓர் அடிப்படை அலகு ''டெசிபல்'' (DECIBEL) ஆகும். பெல் என்பது அளவு அதிக முள்ள அலகு ஆகும். தொலைபேசியைக் கண்டுபிடித்த அலெக் சாண்டர் கிரகாம் பெல்லின் நினைவாக ,பெல், என்று வைக்கப் பட்டது. பெல்லின் பத்தில் ஒரு பாகமே டெசிபல் ஆகும். 130 டெசிபல்களுக்கு மேல் உள்ள யாவும் செவிப்பறையைப்பாதிக்கும்.



★ வானூர்திகளில் வானூர்தி ஓட்டுநர் அறையில் பேசப்படும் பேச் சுக்களைப் பதிவுசெய்யும் ''ஓட்டுநரின் அறை ஒலிப்பதிவு பெட் டியும் வானூர்திகளில் இயக்கப் பொறிகளுள் முக்கியமானவற்றின் இயங்கும் முறைகளைப் பதிவுசெய்யும் வானூர்தி இயக்கப்பதிவுப் பெட்டியும்'' கறுப்புப்பெட்டிகள் எனப்படுகின்றன.

★ கள்ளிமரங்களின் பாலில் இருந்து பெற்றோல் தயாரிக்க முடியு மென மெல்வின் கெல்வின் எனும் விஞ்ஞானி நிரூபித்துள்ளார். ஒளித்தொகுப்புத் தாக்கங்களைக் கண்டறிந்தமைக்காக 1961இல் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. கள்ளிமரங்களின் பால் அநேக ஐதரோகாபன்களின் கலவையைக் கொண்டுள்ளது.

★ பெண் நுளம்பு ஒரு மாத காலத்திற்கும். ஆண் நுளம்பு ஒரு வாரகாலத்திற்குமே உயிர் வாழ்கின்றது. பெண் நுளம்பு குருதியை உணவாக உறிஞ்சிக் கொள்கின்றது. ஆண் நுளம்பு சைவம் தாவரச் சாற்றையே பயன் படுத்துகின்றது.

★ ''கண்கள் விற்கப்படும் தேவைக்கு கீழ்க் கண்ட முகவரியை அனு கவும்'' இப்படி ஒரு விளம்பரம் வந்திருந்தது ஒரு பத்திரிகையில். வறுமையால் வாடும் ஏழைகள் தங்களது உடமைகளை விற்றுத் தீர்த்த பின்னர் தங்களது உடல் உறுப்புக்களையே விற்பது தற் போது வாடிக்கையாகி விட்டது. பிரேசில் நாட்டில் இப்படிப் பட்ட விளம்பரங்கள் அடிக்கடி வெளியாகின்றன.

★ மூன்று வயதில் நிகழ்ந்த விபத்தொன்றில் தனது ஒரு கண்ணை இழந்த பிரெஞ்சுக் காரரான லூயிஸ் பிறெய்லி (1809–1852) கண்பார்வையற்றவர்களுக்கென தொட்டுணரும் எழுத்துக்களை உருவாக்கினார். இவ் வெழுத்துக்கள் இவரது பெயர் கொண்டு பிறெய்லி (Braille) எழுத்துக்கள் என அழைக்கப்படுகின்றன.

★ பெண்களின் இரத்தத்திலும் பார்க்க ஆண்களின் இரத்தத்திலேயே அதிக எண்ணிக்கையில் செங்கலங்கள் காணப்படுகின்றன. சுகதேகி ஆணில் 1 மி. லி. குருதியில் 5·6 மில்லியன் செங்கலங்களும், பெண் ணில் 1மிலி குருதியில் 4·8 மில்லியன் செங்கலங்களும் காணப்படு கின்றன.

★ பெண்களின் மூளையை விட ஆண்களின் மூளை நிறையில் கூடு தலாக இருக்கும் ஆண்களின் உடல் நிறை அதிகம் என்பதால் அதற்கேற்ப மூளை இயக்கம் இருக்கவே இயற்கையாக இப்படி அமைந்துள்ளது. ஆனால் ஆண் பெண்ணிடையே அறிவுத்திறனில் வேறுபாடு இருக்காது.

★ யுனேஸ்கோ கூரியர்– சர்வதேசக் கண்ணோட்டத்துடன் அறிவியல் பொருளாதாரம். கலை, பண்பாடு போன்ற பல்வேறு துறைகளைப்

பற்றி உலக அறிஞர்கள் எழுதும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட மாத இதழ் 36 உலக மொழிகளில் வெளிவந்து அறிவுப்புரட்சி செய்து வரும் ஒரே சர்வதேச மாத இதழ் இதுவேதான். 36 மொழிகளில் தமிழும் ஒன்றாகும் என்பது இனிப்பாக இருக்கின்றதல்லவா?

★ தேனீர், கோப்பி அருந்துவோர் கூட போதைப்பிரியர்களே புகையிலையில் உள்ள நிக்கொட்டீன் (*Nicotine*) கஞ்சாவில் உள்ள ரெட்றா ஹைட்றோ கனாபினோல் (*Tedra Hydro Canabinol*) போன்ற சேர்வைகளுக்கு ஒப்பான கபீன் (*Caffeine*) தேயிலையிலும் கோப்பியிலும் காணப்படுகின்றது. இச்சேர்வைகள் (*Alkalodis*) யாவும் பூச்சிகளிருந்து தாவரங்களைப் பாதுகாக்கின்றன ஆனால் முன்ளந்தண்டு விலங்குகளுக்கு போதையூட்டுகின்றன.

★ ஸ்ரீலங்காவில் 2500 க்கும் அதிகமான கடற்கரைச் சிறுவர்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களில் பலர் எயிட்ஸ் வைரசால் பீடிக்கப்பட்டுள்ளனர். தென்மாகாண கடற்கரைக் கிராமமொன்றில் மட்டும் வெளிநாட்டு தன்னினச் சேர்க்கையாளர்கள்– 17 கார்களை பரிசாக வழங்கியுள்ளனர், சில பகுதியில் மோட்டார் சைக்கிள்கள், காணிகள், வீடுகள் என்பவையும் பரிசுகளாக வழங்கப்பட்டுள்ளன. சில சிறுவர்கள் வெளிநாடுகளுக்கும் சென்று வந்துள்ளனர்.

★ அச்சுக்கலையின் முன்னோடிகள் சீனர்கள் தான் கி.பி.1301 ஆம் ஆண்டு பிரெங் என்ற சீனர்தான் முதன் முதலில் தனித்தனி எழுத்தச்சு முறையைக் கண்டு பிடித்து பயன்படுத்தியுள்ளார். இவர் எழுத்துக்களை சீனக்களிமண்ணில் (*China Clay*) வரைந்து அவற்றை செங்கல் சூளையில் செங்கல்லை வைப்பது போல வேகவைத்து அச்சு எழுத்துக்களை உருவாக்கினார். முதன் முதலில் தாளைக் கண்டுபிடித்ததும் சீனர்களேதான்.

★ பிறந்த குழந்தை ஒன்றுக்கு நாளொன்றுக்கு 18மணி முதல் 20 மணி நேரமும் ஒரு வயதுக் குழந்தைக்கு 12 முதல் 14 மணி நேரமும் வயது வந்தோருக்கு 7 முதல் 9 மணி நேரமும், வயதாகியவர்களுக்கு 5 முதல் 7 மணி நேரமும் தூங்குவதற்காக தேவைப்படுகின்றது.

★ எதிரிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள பல்லி தன் வாலைப் பயன்படுத்துகிறது. எப்படித் தெரியுமா? தன் தசைநார்களை இயக்கி தன் வாலைத்தானே நீக்கிவிடும் ஆற்றல் பல்லிக்கு உண்டு. துண்டிக்கப்பட்ட வாற்பகுதி அரைமணி நேரம்வரை துடித்துக் கொண்டேயிருக்கும். துடித்துக் கொண்டிருக்கும் வாலை எதிரிகள்



பார்த்துத் திகைத்துக்கொண்டிருக்க வாலிழந்த பல்லிகள் ஓடித் தப்பித்துக்கொள்ளும்.

★ நாம் பிறக்கும் போது 270 எலும்புகளுடன் பிறக்கின்றோம். ஆனால் இறக்கும் போது நமது உடலில் 206 எலும்புகள் இருக்கும், மீதி எலும்புகள் நாம் வளர வளர ஒன்றோடு ஒன்று இணைந்து விடுகின்றன.

★ ஐப்பானியர்களுக்கு மலர்களின் மேல் அளவுகடந்த விருப்பம் அவர்கள் நாடு முழுவதும் மலர்களாக பூத்துக் குலுங்குவதற்காக, ஒரு திட்டத்தைக் கையாளுகிறார்கள். பலூன்களில் மலர் விதைப் பொட்டலங்களை இணைத்துக் காற்றில் பறக்க விடுகிறார்கள். அந்த பலூன்கள் தரையிறங்குமிடமெல்லாம் விதைகளைத் தூவி விடுகின்றன.

★ நாயின் கண்களுக்கு நம்மைப் போல பல வண்ணங்களை அறிய முடியாது. அதன் பார்வையில்படும் எல்லாப் பொருட்களும் கறுப்பும் வெள்ளையுமாகத்தான் தெரியும்.

★ மனிதரைக் கொல்லும் பாம்பினாலே மனித உயிரையும் காப்பாற்ற முடியும் ஆம்...... பாம்பின் நஞ்சிலிருந்து பல்வேறு நோய்களுக்கும் தேவையான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. சில நோய்களுக்கு இதை விட்டால் வேறு மருந்தே இல்லை.

★ ஐப்பானிய ஹொண்டா கார் (*Honda Car*) தயாரிப்பாளர்கள் நவீனகார் ஒன்றை உருவாக்கியுள்ளனர். போதைப் பொருள் அருந்திய ஒருவர் காரில் ஏறினால் கார் தானாகவே நின்றுவிடுகிறது. இதன் ஸ்டியரிங்வீலில் (*Steering Wheel* –சுக்கான்) உள்ள பிளாற்றினம் மிகவும் உணர்ச்சியுடையது. போதைப் பொருளின் மூச்சை உணர்ந்ததும் எஞ்சின் நின்று விடுகிறது. இதில் ஒரு சிக்கல் ஓட்டுநர் குடிகாரராக இல்லாவிட்டாலும், பயணிகளில் ஒருவர் குடித்திருந்தாலும் கார் நகராது.

★ மருத்துவர்கள் தரும் மருந்துச் சீட்டுகளில் *RJ* என குறிப்பிடப்பட்டு வருகின்றது. *R* – லத்தின் மொழியில் *Recipie* (கீழே குறிக்கப்பட்ட மருந்துகளைப் பெறுக) என்பதையும், *J – Joan* (மருத்துவக்கடவுள்) என்பதையும் குறிக்கும். அதாவது, நோய் குணமாக மருந்தோடு கடவுளின் அருளும் தேவை எனக் குறிப்பிடுகின்றன.

★ ஆன் போஹா, ஆன்போபார் என்ற இரு சகோதரர்கள் ஒன்று சேர்ந்து ஒரு தலைவலி மருந்தைக் கண்டுபிடித்தார்கள். அந்த மருந்துக்கு இவர்கள் பெயரே வைக்கப்பட்டது. சீன மொழியில் 'ஹா' (*Haw*) என்றால் புலி, 'பார்' (*Par*) என்றால் சிறுத்தை. அவர்கள் கண்டுபிடித்த அந்தத் தலைவலி மருந்துதான் டைகர் பாம் (*Tiger Balm*) என்பதாகும்.

# உயர்திரு. க. சி. குலரத்தினம்

## அவர்களுக்கு

## எமது கண்ணீர் அஞ்சலிகள்!

எமது அன்புக்கும் மதிப்பிற்குமுரிய பல்கலைப் புலவர் உயர்திரு. க. சி. குலரத்தினம் அவர்கள் 06-02-1994 ல் இறைபதம் எய்தியதை அறிந்து எமது சார்பாகவும், எமது விநாயகர் தரும நிதியத்தின் சார்பாகவும் ஆழ்ந்த கவலைகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னார் தமிழுக்கும், சைவத்திற்கும் பெரும்பங்கு பணியாற்றி தன் இறுதி மூச்சுவரை இவைக்காகவே தனது நேரத்தைச் செலவிட்டு, எல்லார் உள்ளங்களிலும் அழியாத இடம் பிடித்த பெருமகனார் ஆத்மசாந்தியடைய அவரின் குடும்பத்தாருடன் இறையருளை வேண்டுகிறோம்.

— நிறுவனர் —

# முதுதமிழ் முத்துமணி ரத்தினம்

# மூதறிஞர் க. சி. குலரத்தினம்

க. சி. குலரத்தினம் என்றால் தமிழ் உலகில் அறியாதார் யார் உளர். சைவத்தின், செந்தமிழின் அணியார அழகு கண்ட தமிழ் அன்னையின் தவப்புதல்வன். அவர் எம் இனத்திற்கு ஆற்றிய பணியினை சாதாரணமாக மறந்துவிட முடியாது. எழுத்து வடிவில் அடக்கி விடவும் முடியாது. நடமாடும் பல்கலைக் கழகமாக பல்கலைப் புலவர் என்ற பட்டத்தோடு சைவச்சீலராக சாதாரண எளிமையான ஆச்சிரம வாழ்வு போன்று வாழ்ந்து அதை நிதர்சனப்படுத்திய ஒரு மகாபுருஷர். அவர் பெற்ற பட்டங்களோ பலப்பல. சைவப்புலவர், ஞானவள்ளல், நற்றமிழ் வித்தகர், தமிழறிஞர், சைவப்பேரறிஞர், மூதறிஞர் என்றெல்லாம் பலராலும் அன்புடன் அழைக்கப்பட்டாலும் அவருக்கு நிகர் அவரே, நடமாடும் பல்கலைக் கழகம். பரமேஸ்வராக் கல்லூரி சிறந்த மாணவனாக கல்விகற்று வெளியேறி ஆசிரியத் தொழிலில் ஈடுபட்ட போது மூதன்முதல் கொக்குவில் நாமகள் வித்தியாசாலையில் தன் ஆசிரியப் பணியை மேற்கொண்டார். அதனால் அந்தப் பாடசாலைக்கு தனிப்பெருமை சேருகின்றது. நாவன்மை மிக்க மூதறிஞர் உருவத்தில் சிறியர். உள்ளத்தால் பெரியவர். அதனால் அவரை



அன்புடன் அகஸ்தியர் என்று கூறுவார்கள். தமிழ், ஆங்கிலம், ஆரியம், சிங்களம் முதலிய மொழிகளில் பாண்டித்தியமும், ஆற்றலும் பெற்றிருந்தார். அவருடன் ஒரு சிறிதுநேரம் உரையாடினாலே போதும். அரிய, பெரிய விடயங்களை மிகச் சாதாரணமாக விளக்கி விடுவார். இவருடைய மாணவனாக நான் இருந்து கல்வி அறிவு பெற்றதையிட்டு பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது. அதை என்னால் மறக்க முடியவில்லை.

கல்வி என்பது விளக்கேற்றல் என்ற கருத்துக் கொண்ட நல்லை நகர் நாவலர் பெருமான் மனிதன் கல்வியிற் பிறந்து, கல்வியில் வாழ்ந்து கல்வியினை ஒரு வாழ்க்கைப் பழக்கமாகக் கொள்ள வேண்டுமென்று கூறுகின்றார். விளக்குப்போன்று நாம் கல்விப் பொருளைப் பிறருக்குக் கொடுக்கும் போது கல்வி பெருகிக் கொண்டே வரும். ஒரு நாடு அரசியல் விடுதலை பெறுவதற்கு முன் சமய, மொழி, கலாசார உணர்வு விடுதலை பெற்றால் முழுமை பெறும். பல்கலைக் கழகங்களின் தாய்மொழி போதனாமொழியாக இருந்தால் மிகவும் பயனைத்தரும். தாய்மொழி மூலம்தான் ஒருவர் தன் உணர்ச்சிகளையும், உயர்கருத்துக்களையும் தெளிவாக வெளியிட முடியும். அவரது படைப்பாற்றல் வளரும், ஆளுமை வளரும், தாய்மொழிக் கல்விமூலம் நாகரீகம், பண்பாடு, பாரம்பரியம், மக்களின் எழுச்சி ஆகியவற்றை வெளிப்படுத்த முடியும். இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே நாவலர் பாரம்பரியத்தில் வாழ்ந்து அதனை அடியொற்றி தனித்தும், இணைந்தும் பல அரிய நூல்களை ஆக்கி பிரசுரம் செய்து வெளியிட்டவரும், தூய்மையான மனோபலமுள்ளவரும், எடுத்த தன் முயற்சிகளை செய்து முடித்த மனச்சோர்வறியா இளைஞன் தான் க. சி. கு.

நானிலங்கனிந்த நல்லாசிரியன். சைவமும் தமிழும் தழைக்க வந்த தவநெறியாளன், பற்பல நூல்கள் படைத்தளித்த பேராசான், சொற்சோர்வறியா சொற்கொண்டல், பல்கலை வேந்தன், பழந்தமிழ் மரபோடு புதுமை பல கண்டவன், பல அறிஞர்களை உருவாக்கி உலவ விட்டவன், உருவாக்கி வந்தவன்.

ஓம் சாந்தி!

அருள்நெறித் தொண்டர்
சி. வ. ஆறுமுகசாமி

''ஜெகா பவனம்''
கோணாவளை கிழக்கு,
கொக்குவில் - இலங்கை.

ௐ

# தமிழனைத் தேடுகிறேன்!

— காசி ஆனந்தன் —

மொழியால் தமிழனைத் தேடினேன் — அவன் ஆங்கிலத்தை கொஞ்சிக் கொண்டிருந்தான். பண்பாட்டால் தமிழனைத் தேடினேன் — அவன் 'பர்த்டே' பார்ட்டியில் 'கேக்' வெட்டிக் கொண்டிருந்தான். நாட்டால் தமிழனைத் தேடினேன் — அவன் அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும், ஆஸ்திரேலியாவிலும், ஏதிலியாய் நின்று கொண்டிருந்தான். இனத்தால் தமிழனைத் தேடினேன் — அவனைக் காணவில்லை. தமிழன் அழிந்து போனான் அன்று...

பண்டைக் கிரேக்க – ஐரோப்பிய – இலத்தின் நாகரிகம் அனைத்துக்கும் மூலமான பாபிலோனியாவில் வாழ்ந்தவன் தமிழன்தானாம். அந்த மண்ணிலுள்ள ஊர் என்ற சொல் பச்சைத் தமிழ்ச் சொல்லாம் – பாவாணர் கூறுகிறார்.

ஸ்பெயின் நாட்டில் இன்று விடுதலை கோரிப் போராடிவரும் பாசுக்கு (*Basque*) மக்கள் குமரியிலிருந்து போன பழைய தமிழனின் வழித் தோன்றல்கள்தானாம். பாசுக்கு மொழி தமிழுக்கு மிகவும் நெருக்கமானதாம். ஆய்வாளர் 'இலாகோவாரி' (*Dr. N. Lahovary*) சொல்கிறார்.

ஆபிரிக்கா பண்டைத்தமிழனின் நாடுதானாம். ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் அங்குண்டாம் – செனகல் நாட்டுத் தமிழறிஞர் செங்கோர் முழங்குகிறார். எடின்பரோ (*Edinborough*) கன்ரர்பரி (*Canterbury*) ஆகிய ஊர்ப் பெயர்களில் உள்ள 'புரி' தமிழ்ச் சொல்தானாம். சின்ன மனிதர்கள் வாழ்ந்ததால்தான் சினா என்று ஆயிற்றாம். அரிசி என்ற தமிழ்ச் சொல்லில் பிறந்ததுதானாம் ஓரிசா – இன்னொரு பேராசிரியர் அடிக்கிக் கொண்டே போகிறார். சரி, அங்கெல்லாம் வாழ்ந்த தமிழன் எங்கேதான் போய்த்தொலைந்தான். சொல்லுங்கள்.

காணவில்லை!

சிந்துவெளியில் தமிழன் வாழ்ந்தான் என்கிறீர்கள், அவன் பயன்படுத்திய சட்டி இருக்கிறது, பானை இருக்கிறது. செம்பினால் செய்த ஊசி கூட இருக்கிறது. தமிழனை மட்டும் காணவில்லை. தமிழன் அடையாளம் இழந்தது எப்படி? மொழியாலும், பண்பாலும், நடையாலும் பிறழ்ந்தது எப்படி?



தமிழன் தன்னைத்தானே மறந்தான்! தன்னைத்தானே தாழ்த்தினான்! தன்னைத்தானே பிரித்தான்! தன்னைத்தானே காட்டிக் கொடுத்தான்! தன்னைத்தானே அழித்தான்! இதுதான் வரலாறு. பைந்தமிழ் ஈழத்தின் மீன்பாடும் தேன்நாடாம் மட்டு நகரில் 500 ஆண்டுக்கு முன்பு வந்து குடியமர்ந்த பறங்கியர்கள் (போர்த்துக்கீசர்) வாழ்கிறார்கள். இன்றும் வீடுகளில் தங்கள் தாய்மொழியாம் போர்த்துக்கீய மொழியிலேயே இவர்கள் உரையாகிடுறார்கள் ஆனால் – 150 ஆண்டுகளுக்கு முன்பு மொரிசியர் தீவுக்குப் போன தமிழன் தன் தாய்மொழியை, தமிழை முற்றிலுமாக மறந்து போனான். மொரிசியல் தீவில் தமிழன் கிரியோல் மொழிக்காரனாய், ஆங்கில மொழிக்காரனாய் முகமிழந்து நிற்கின்றான்.

வெள்ளைக்காரனுக்கு அடிமையாக இருந்து, அவனுக்கு தொழும்பு செய்த காலத்தில் அவனைப் பார்த்து சார் போட்ட தமிழன் இன்னும் 'சார்' போடும் வெட்கம் கெட்ட பழக்கத்தை விட்டொழித்ததாகத் தெரியவில்லை. ஆங்கிலம் பேசுவது நாகரிகம் என்றும் – தமிழ் பேசுவது பட்டிக்காட்டுத்தன்மை என்றும் தன்னையும், தன்மொழியையும் தாழ்வாக இவன் கருதும் பாங்கினை – தீங்கினை யாரிடம் சொல்லி அழுவது?

தன்னைத் தாழ்வானவன் என்றும், அடுத்தவனை உயர்வானவன் என்றும் கருதி அடுத்தவன் மொழியை, பண்பாட்டை ஏற்று தமிழன் அழிந்தான். இழிந்த இனம்! அழிந்த தமிழினம் இன்ன உலகில் இழிந்த தமிழினமாய் நிற்கிறது. தொல்காப்பியம் கி. மு. 500 இல் எழுதப்பட்டது. தமிழ் முளைத்து – வளர்ந்து – பூத்து – கனிந்த, பின்பு தோன்றிய தமிழ் இலக்கணம் தொல்காப்பியம்.

ஆயிரம் ஆண்டுகளின் பின்பு கி. பி. 500 இல் தான் ஆங்கிலமும், சிங்களமும் தோன்றின, ஆனால் – ஆங்கிலேயனுக்கும், சிங்களவனுக்கும் இன்று அரசுகள் உண்டு.

நன்றி: உதயன் 23 – 01 – 94

ராணி.

*சிகரட் புகை:* சிகரட்டின் புகை உடலினுள் நுழைந்த மறுகணமே இருதயம், நுரையீரல் ஏன் உடல் முழுவதும் துரித இயக்கமடைகின்றன. இருதயம் 12 தொட்டு 20 தடவைகள் கூடுதலாகத் துடிக்கிறது. இரத்த அழுத்தம் 10 தொட்டு 20 புள்ளிகள் வரை அதிகரிக்கின்றது. புற்று நோயைத் தோற்றுவிக்கும் இராசயன மூலிகைகள் நுரையீரலில் படிய விடப்படுகின்றன. சிறுநீரகம் மூத்திரப்பை என்பன பாதிப்புறுகின்றன. வாயில் துர்நாற்றம் ஏற்படும். சிகரட் குடிப்பவரை மட்டுமன்றி அருகிலிருப்பவரையும் பாதிக்கும்.

உ

# எங்கே தமிழ்? எதிலே தமிழ்?

## தமிழுக்கு ஏன் இந்த அவலம்?

## அதனை மாற்ற அறைகூவல் விடுக்கிறார் கி. ஆ. பெ.

தமிழ்ப் பெரியார் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு 95 வயது. சில மாதங்களுக்கு முன்னர் அவரை தமிழ்நாடு அரசு கைது செய்தது. காரணம் ஆகாஷ்வாணி என்ற இந்திச் சொல் பயன்படுத்தப்படுவதை ஆட்சேபித்து- இந்தித்திணிப்பிற்கு எதிராக அவர் மறியல் போராட்டம் நடத்தியதேயாகும். ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான வைத்திய கலாநிதி சிவஞானசுந்தரம் (நந்தி) கடந்த டிசம்பரில் தமிழ்ப் பெரியார் கி. ஆ. பெ. விசுவநாதத்தை திருச்சியில் சந்தித்தார்.

அப்போது தமிழ் மொழியின் இன்றைய நிலையை நினைத்து தமிழ்ப் பெரியார் மிகவும் மனம் நொந்து இருந்தார் என நந்தி தெரிவித்தார். தமிழ்ப் பெரியார் விசுவநாதம் ''தமிழ்ப்புலவர்குழு'' என்ற ஒரு நிறுவனத்தை ஆரம்பித்து தமிழ் நாட்டில் தமிழுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலையை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்று சிந்திக்க வேண்டுகிறார்.

நமது நாட்டில் நிலை அந்த அளவிற்கு மோசமாக இல்லை. அதற்கு எமது உரிமைப் போராட்டமும் ஒரு காரணமாகும் என்று கி. ஆ. பெ. யிடம் நந்தி எடுத்துரைத்திருந்தார். விசுவநாதம் அவர்கள் தமிழ் மக்களுக்கு விடுத்த வேண்டுகோள் எம்மக்களின் சிந்தனைக்கும் உரியதாக உள்ளது. ஆகவே அதனை இங்கு பிரசுரிக்கின்றோம்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய நமது முன்னோர்கள் கண்ட மொழி நம் தாய்மொழி. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த மொழி. முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களும் வளர்த்த மொழி நம் தமிழ்மொழி. இது இன்று அழிந்து கொண்டு வருகிறது. பயிற்று மொழி தமிழாக இல்லை, ஆட்சிமொழி தமிழாக இல்லை. திருக்கோயில்களில் தமிழ் இல்லை. நீதிமன்றங்களில் தமிழ் இல்லை. இசையரங்குகளில் தமிழ் இல்லை, மழலையர்பள்ளிகளில் தமிழ் இல்லை, மனைப் பெயர்களில் தமிழ் இல்லை, கடைப்பலகைகளில் தமிழ் இல்லை, நம் மக்களுக்கு வைக்கும் பெயர்களும் தமிழாக இல்லை, தமிழன் தமிழனோடு பேசும் போது கூட தமிழில் பேசுவதில்லை, தமிழன் தமிழனுக்கு



எழுதும் கடிதங்களைக் கூட தமிழில் எழுதுவதில்லை. தமிழ் மக்கள் கையெழுத்தினையும் தமிழில் போடுவதில்லை, தமிழில் கையெழுத்திடுபவர்கள் கூட தலைப்பெழுத்தைத் தமிழில் போடுவதில்லை.

புலவர் பெருமக்களுக்கும், பொதுமக்களுக்கும் சிறிதும் தொடர்பில்லை. இதனால் கலப்படத் தமிழ்க்காரர்களும் திரைப்படத் தமிழ்க்காரர்களும் பொதுமக்களோடு தொடர்பு கொண்டு வரும் நிலை ஏற்பட்டு பொதுமக்கள் பேசுகின்ற மொழி கூட தமிழாக இல்லை.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை மாறி எங்கே தமிழ்? எதிலே தமிழ்? என்ற நிலை வந்து விட்டது. ''தமிழ் எங்கள் உயிர்'' என்று போற்றி வளர்த்த புலவர் பெருமக்களெல்லாம் மறைய தமிழும் மறைந்து கொண்டே வருகிறது. இறுதியாக நம்முடைய காலத்திலேயே நம் கண்முன்னே நம்முடைய மொழி அழிக்கப்பட்டு வருகிறது.

தமிழ் மொழியை நம்மால் வளர்க்க முடியாவிட்டாலும் அது அழிவதையாயினும் தடுக்க வேண்டும் என்று புலவர் பெருமக்களில் சிலரும், பேராசிரியர்களில் சிலரும், தமிழறிஞர்கள் சிலரும் சிலபல இடங்களில் கூடிப்பேசி மாநாடுகளை நடத்தி முடிவுகளை அரசுக்கு அறிவித்து ''உண்ணாவிரதமிருந்து'' வழிநடைப்பயணத்தையும் நடத்தி மறியல் போராட்டத்தையும் நடத்திச் சிறை புகும் வரை நடந்தேயாயிற்று. அரசாங்கம் அன்றே அவர்களை விடுதலை செய்து விட்டு அமைதியடைந்து விட்டது. பலன் ஒன்றுமில்லை. அரசினர் பிறதுறைகளில் செலுத்தும் கவனத்தில் நூற்றில் ஒரு பங்கினைக் கூடதமிழ்த் துறையில் செலுத்துவதில்லை இதனால் ஆட்சியினர்க்குத் தமிழுணர்வு சிறிது கூட இல்லையோ என்று ஐயுற வேண்டியிருக்கிறது.

### இதற்கு என்ன செய்யலாம்?

ஆகவே தமிழ்ப்பெருமக்கள் ஒவ்வொருவரும் இதற்கு என்னென்ன செய்யலாம்? எதையெதைச் செய்தாக வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும் என்பனவற்றை ஆராய்ந்து நல்லமுடிவுக்கு வரவேண்டும். ஒவ்வொருவரும் இது தொடர்பான தமது கருத்துக்களை சுருக்கமாக எழுதி தம்மால் என்ன செய்ய முடியும் என்பதையும் குறிப்பிட்டு தனது திருச்சி இல்லத்துக்கு அதனை அனுப்பி வைக்கும்படி தமிழ்ப் பெரியார் கி. ஆ. பெ. விசுவநாதம் கோரியிருக்கிறார்.

நன்றி — உதயன் 06-02-94.

4-ம் பக்கத் தொடர்...

இவற்றின் உண்மையான செயற்பாடுகளை ஆராயும் போது காற்றணுவின் செயற்பாடே முதன்மை வகிக்கின்றது. தீப்பொருளும் நீர்ப்பொருளும் சேர்ந்தே காற்றணுவை உருவாக்குவதென்பதை உணருகிறோம். இக்காற்றணு உருவாகியிருக்காது விட்டால் இப் பூவுலகில் எந்தவித உயிரினங்களும் உருவாகியிருக்க முடியாது. காற்று உருவாகிய பின்னர் தான் பலவித உயிரினங்கள் உருவாகலாயின. காற்று எமது இருதயத்தை இயக்காது இருந்தால் நாம் உயிர்வாழ முடியாது. இன்றைய காலகட்டத்தின் சூழல் அழுக்கை தடுப்பதற்கு எல்லா நாடுகளிலும் செயற் திட்டங்கள் வகுக்கப்பெற்று வருகின்றது. சூழல் மாசு என்பது காற்றணு அசுத்தத்தையே குறிக்கின்றது. காற்றணு சுத்தமாக செயற்பட்டால் மட்டுமே போட்டி பொறாமை – ஆசைகள் இன்றி பிரச்சினை அற்ற நல்வாழ்வை வாழமுடியும். ஐந்து வித பூதத்தில் காற்றணுவை நடு நாயகமாக வைத்துள்ளார்கள். எல்லா உயிரினங்களினது மனோ நிலை உருவாவதற்கு மூலகாரணமாக அமைந்துள்ளது காற்றணுவாகும். இக்காற்றணுவானது மாசுடன் பரவி நிற்பதால் – இக்காற்றணுவின் செயற்பாட்டால் இயங்குகின்ற ஆன்மாக்களும் ஆன்மாக்களை இயக்குகின்ற இருதயமும் முறைதவறி இயங்குவதால் மனோ நிலை மாறுபாடடைகின்றது.

சுத்தமான காற்றாக அமைந்து அவற்றின் மூலம் இயங்குகின்ற தொழிற்பாடுகள் சீராக இயங்குவதால் அதிலிருந்து உருவாகும் சிந்தனைகள் நல்ல அறநெறி முறையாய் அமைகின்றது. நாம் எவ்வாறு நோக்கினாலும் சகல ஆன்மாக்களின் இயக்கங்களுக்கெல்லாம் மூல காரணமாக அமைவது காற்று என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. பகுத்தறிவுள்ள மனிதராய்ப் பிறந்த நாம் ஐந்து வித அணுக்களிலே காற்றணுவிற்கு நன்றி கூற வேண்டியது எமது தலையாய பெரும் கடமையாகும். இதை ஞானத்தின் மூலம் அறிந்த பழங்கால ஞானிகள் காற்றணுவுக்குரிய மூன்று எண்ணை குரு வணக்கமாக அமைத்து நன்றி செலுத்தும்படி எப்போதும் எல்லா விடயங்களிலும் ''மூன்று மூன்று'' என்று அவ்எண்ணை நினைவுபடுத்தி உள்ளனர். இவற்றை உணர்ந்து செயற்படுத்துவது எமது முக்கியகடமையாகும். மனிதனின் தவறான செயற்பாட்டால் மாசடைந்த காற்றை எம்மால் முடிந்தளவு சுத்தமாக்குவதற்கு, சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு, வீதியையும் – வீடுவளவுகளையும் – தெருக்களையும் சுத்தமாக வைத்து நல்ல காற்றணுவின் செயற்பாட்டால் – எம்சிந்தனை மாற்றமடைந்து நன்றியை மறவாதவர்களாகவும் குருவணக்கத்தை மறவாதவர்களாகவும் செயற்பெறுமாறு அன்போடும் பண்போடும் பணிவோடும் இருகரம் கூப்பி வேண்டுகிறோம்.

— நிறுவனர்.



# வாழிய

# அறத்தமிழ்  ஞானம்

வாழிய அறத்தமிழ் ஞானம் — இந்த
வையகம் மீதினில் ஆயிரமாண்டு!
ஆழியே ஆக அறிவினில் நீயும்
ஆண்டுகள் ஆயிரம் வாழியவே!

ஈழத்து மாணவர் அறிவினைப் பெருக்கி
ஏற்றமாய் அவர்களின் வாழ்வினை ஆக்கி
ஞாலத்து மீதினில் ஆயிரம் ஆண்டு
ஞானமே நீயும் வாழிய வாழியவே.

"எண்ணும் எழுத்தும் எங்களின் வாழ்வில்
கண்ணென ஆகும்" என்றனர் ஆன்றோர்
உந்தன் பணியும் இதுவே யாகி
உலகினில் ஆயிரம் ஆண்டுகள் வாழி.

வணக்கம்.

கொழும்புத்துறையூர்
சி. சி. வரதராசா
கௌரவ பொதுச் செயளாளர்,
யாழ் மாவட்ட இந்து இ. பேரவை
நல்லை திருஞானசம்பந்தர்
ஆதீனம்.

நல்லூர்,
யாழ்ப்பாணம்.
28-01-1994.

விநாயகர் தரும நிதிய நிறுவனத்தால் இதுவரை வெளியிடப்பெற்ற இலவச வெளியீடுகளின் விபரங்கள் ஒரே பார்வையில்:—

| வெளியீட்டின் பெயர்கள் | வெளியிடப் பெற்ற காலம் | பக்கங்கள் | பிரதிகள் | வெளியீட்டு இலக்கம் |
|---|---|---|---|---|
| ★ 1. மருத்துவ வெளியீடு | 1988, 90, 91, 92 | 48 | 10850 | 1, 2, 7, 11, 16, 18, 26 |
| ★ 2. கீதை அமுதரசம் | 1989 | 24 | 700 | 3 |
| ★ 3. ஆத்ம சிந்தனை | 1990, 91, 92 | 46 | 4900 | 4, 5, 12, 19, 24 |
| ★ 4. ஞான வாழ்வு மலர | 1990, 91 | 48 | 2800 | 6, 17 |
| 5. நீதிப்பொருள் | 1990, 94 | 38 | 1600+934 | 8 |
| 6. அறநெறி மணிகள் | 1990, 94 | 30 | 7800+2700 | 9, 13, 14, 15, 29 |
| 7. பிரபஞ்ச தத்துவம் | 1990, 91, 94 | 30 | 2800+934 | 10, 21 |
| ★ 8. தெய்வீகப் பண்பு நிலை | 1991 | 26 | 1600 | 20 |
| ★ 9. ஆன்மா உருவாகும்விதம் | 1991 | 38 | 1600 | 22 |
| ★ 10. சாரணர் நூல் | 1992 | 48 | 1550 | 23, 25 |
| 11. தமிழ் அகராதி | 1992 | 280 | 1200 | 27 |
| 12. மருத்துவ தொகுப்புகள் | 1992 | 120 | 700 | 28 |
| 13. திருக்குறள் | 1993 | 54 | 3220 | 30 |
| 14. உறுப்பெழுத்துக்கொப்பி | 1993, 1994 | 16 | 4800 | — |
| 1. அறத் தமிழ் ஞான சஞ்சிகை | 1992, 1993, 1994 | 40 சராசரி | 1600 | மாதாந்த காலாண்டு வெளியீடு |
| 2. அறம் வளர் இளம் தமிழ் | 1992, 1993, 1994 | 50 சராசரி | 2100 | காலாண்டு வெளியீடு |

★ இவ் வெளியீடுகள் கைவசம் இல்லை.

எமது வெளியீடுகளை
பின்வரும் விலாசங்களில்
பெற்றுக் கொள்ளலாம்.

---

★ பாஷையூர்புனிதஅந்தோனியார் மக்கள் முன்னேற்ற ச. ச. நி.

★ சி. சி. வரதராசா
- கொழும்புத்துறை.

★ சிவ. ஆறுமுகசாமி
- கோணாவளை கிழக்கு, கொக்குவில்.

★ வழி கலை இலக்கிய வட்டம்
- சுன்னாகம்.

★ அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவ
- கண்டி றோட், கைதடி.

★ அன்னை மருந்தகம்
- பருத்தித்துறை.

★ S. K. சாமி — நெல்லியடி.

★ கலைச்சோலை
- வல்வெட்டித்துறை.

★ அபிராமி மருந்தகம் - நீர்வேலி

★ சின்னையா ஸ்ரோர்ஸ்
- கொடிகாமம்.

★ சிவம் மருந்தகம்
- சாவகச்சேரி.

★ சூரியா பார்மசி - புத்தூர்.

★ ரி. வி. பாலா புத்தகசாலை
- இணுவில்.

---

இவ் வெளியீடு புலோலி மேற்கு விநாயகர் தரும நிதியத்திற்காக விநாயகர் தரும நிதிய அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.